# கதிர்காமப் பாத யாத்திரை விருத்தங்கள்



இசை: ராஜ்குமார் (திருக்கோவில்)

இறுவெட்டு தயாரிப்பு: N.A. லோஜன் (தம்பிலுவில்)


பாடகர்கள்: இராதெய்வராஜன், ஹேமா, புஸ்பலதா (திருக்கோவில்)




ஆக்கம்:

இரா தெய்வராஜன் - திருக்கோவில்

# கதிர்காமப் பாதயாத்திரை விருத்தம்



இசை- M.ராஜ்குமார் (திருக்கோவில்)

இறுவெட்டு தயாரிப்பு - N.A.லோஜன் (தம்பிலுவில்)

பாடகர்- இரா.தெய்வராஜன் (திருக்கோவில்)

கைநூல் ஆக்கம் : இரா.தெய்வராஜன்

# கழுகுமலைப்பத்து

கழுகுமலை தனில் உறையும் முருகவேளே
கருத்துடனே உன் பாதமலர் தானே ஓதப்
பழுதொன்றும் வராமற் காக்கவேணும்
பச்சைமால் தன் மருகா பார்வதி யின்மைந்தா
வழுவாமல் அடியேன்முன் நிற்கவேணும்
வரும்பிழைகள் தனையகற்றி வழியே செய்வாய்!
தெளிவாக உன்பாதந்துதிப்பேனையா

காடுதனில் வேங்கைமரமாகி நின்றாய்
கானவர்கள் கண்டு கடுவேகத்தாலே
சாடிடவே மனதிலெண்ணிப் பரிசைகத்தி
தானெடுத்தார் தவிடுபொடியாக்கவென்று
கூடிய குறவரெல்லாம் நிமித்தங்கண்டு
குமரவேள் என்றெண்ணிக் குலைந்திட்டார்கள்
தேடியே யுன்பாதந் துதிப் பேனையா
சுவாமி தென்கதிரை முருகோனே தெரிசிப்பாயே!

கிட்டாத பொருள்தன்னைப் போலெந்நாளும்
கீர்த்தியுடனே இந்தப் புவியில் நானும்ஷ
எட்டி எட்டியே உன்னைப் பார்க்கும்போது
ஏமாற்றி என்னைவிட்டு ஏகலாமோ?
சட்டமுடன் தோகைமயில் மீதிலேறிச்
சடாட்சரமாய் என்முன்னே தோற்றவேணும்
திட்டமுடன் உன் பாதந்துதிப்பேனையா
சுவாமி தென்கதிரை முருகோனே தெரிசிப்பாயே!

கீர்த்தியுடனே இந்தப் புவியில் நானும்
கிருபையுடன் உன்பதியைத் தேடிவாறேன்
பூத்தமலர் போலுன்னைக் காண்பதெப்போ?
புண்ணியனே எனக்கு வரந்தருவதெப்போ?
வார்த்தையொன்று உரையாயோ வள்ளி வாழ்வே
வந்துனது சந்நிதியில் மனதன்பாகத்
தீர்த்தங்கள் ஆடியுனைத் துதிப்பேனையா
சுவாமி தென்கதிரை முருகோனே தெரிசிப்பாயே!

குவலயத்தில் அடியேன் நான் செய்தபாவம்
குற்றமெல்லாம் பொறுத்துனது குழந்தையைப்போல்
கவலையற்று வாழ்ந்திருக்கக் கருணை தந்து
காப்பது உன் செயலல்லோ கார்த்திகேயா
சவலை இளங்கன்றது தன் தாயைத்தேடித்
தயங்குவது போல நான் தியங்கலானேன்
சிவலை நிற மார்பழகா செந்தூர்க்கந்தா
சுவாமி தென்கதிரை முருகோனே தெரிசிப்பாயே!

கூடியே மறலியென்னைப் பிடியாவண்ணம்
கொடுநரகிலே யானும் வீழ்ந்திடாமல்
வாடியே மனம் மெலிந்து போகாவண்ணம்
ஆகவே உன்னுடைய கீர்த்திதந்து
பாடியே பவனொளி பவாயம் என்றால்
பறக்குமே பாசாசி முதல் ஏவல்தானும்
தேடியே உன்பாதந்துதிப்பேனையா
சுவாமி தென்கதிரை முருகோனே தெரிசிப்பாயே!

கெடுதியுள்ள சூரனை வதையே செய்தாய்
கிளி மொழியாள் வள்ளி தினைப் புனத்திலேதான்
படிமீதில் தான் பெரிய பண்டாரம்போல்
பாசிபற்றியே பழுத்த கிழவனாகித்

தடியூன்றித் தண்டுகமண்டலமும் கொண்டு
சாட்டாங்கமாய்க் குறவர்க் கெதிரே சென்றாய்
தேடியே உன்பாதந்துதிப்பேனையா
சுவாமி தென்கதிரை முருகோனே தெரிசிப்பாயே!

**கே**சவனார் மருகோனே நீசெய்கோலம்
கெடிதான குமரகுரு வேடனாகி
நேசமுடன் கையில் அம்பு வில்லுங்கொண்டு
நிமிஷமுடன் வள்ளிதினைப் புனத்திலேதான்
பாசமுடன் பெண்ணே கண்ணேயென்று
பண்புடைய வள்ளியை நீ பாகம் கொண்டாய்
தேசமெல்லாம் திரிந்தலைந்தேன் உன் பாதங்காண
சுவாமி தென்கதிரை முருகோனே தெரிசிப்பாயே!

**கை**யிலே கோழிக் கொடியும் வேலும்
வள்ளி தெய்வானையுடன் மயில்மீதேறி
தைய நல்லார் தூபதீபம் பிடிக்கத்
தாதியர்கள் இருபுறமும் கவரிவீச
மெய்யுடனே ஆறுமுகரூபமாகி
வேலவனே வந்தெனக்கு விடைகள்தாரும்
தெய் தெய் என்றுன் பாதந்துதிப்பேனையா
சுவாமி தென்கதிரை முருகோனே தெரிசிப்பாயே!

**கொ**ன்றைமலர் வேணியனின் நெற்றிக்கண்ணில்
குழந்தையாய் வந்துதித்த குமரவேளே
அண்டரெல்லாம் உனைக்காண வேண்டியிங்கே
அபயமென்று கையேந்தி அணியில் நிற்பார்
தண்டை கிண்கிணி காலில் சதங்கை கொஞ்சத்
தானோடி வந்தெனக்குன் ஒளியைக் காட்டும்!
தெண்டனிட்டே உன்பாதந்துதிப்பேனையா
சுவாமி தென்கதிரை முருகோனே தெரிசிப்பாயே!

கோதையர்கள் இருபுறமும் கவரிவீசக்
குளிரான மதிமுகங்கள் ஆறுந்துன்னக்
காதலுடன் பன்னிருகை வேலுந்துன்னக்
கான மயில் மீதேறுங் கார்த்திகேயா
வாதுடனே சோதையன் செய் சிகரந்தனை
வடிவேலால் நீறசெய்த வானோர்கோவே
சீத மருகோனே உன் புகழைச் சொன்னேன்
சுவாமி தென்கதிரை முருகோனே தெரிசிப்பாயே!

கவ்வியேபூத மென்னைப் பிடியாவண்ணம்
காத்துனது கிருபைதந்து இரட்சியும் ஐயா
வவ்வியே மெய்மறந்துமொரு பாசாசுதானும்
பவனொளி பவாயம் என்றால் பறக்குமேதான்
ஒவ்வியே எனைச் சூழும் லாடன் மாடன்
ஓம் நமவிவாய மென்றால் ஓடிடாதோ
செவ்வையாய் உன்பாதந்துதிப்பேனையா
சுவாமி தென்கதிரை முருகோனே தெரிசிப்பாயே!

இக்கணமே இது நல்ல வேளையையா
இதோ பாரும் சந்நிதியில் திருவிழாவை
வணக்கமாய்க் கற்புர மடவிளக்கு
வகை வகையாய்க் கன்னியர்கள் ஏந்தி நின்றார்
எக்காளம், பேரிகை, தம்புரா, நல்மேளம்
இடி யெனவே எத்திசையும் முழங்கி நிற்க
இக்கணமே உன்பாதம் துதிப்பேனையா
சுவாமி தென்கதிரை முருகோனே தெரிசிப்பாயே!

திருச்சிற்றம்பலம்

அறுபது சில்லறைக் கோர்வை பக்கம் : 179 - 183

# கதிர்காமப் பாத யாத்திரை விருத்தம்

1. கதிர்காமம் கால்நடையாய்ச் செல்லுகின்றோம்
கஜமுகனே உன்கருணை நாடி நின்றோம்
விதி தந்த தீவினையை விலக்க வந்தோம்
வித்தகனே விக்கினங்கள் நீக்கி வைப்பாய்
மதி சூடும் பரமனுக்கே பாடம் சொன்ன
மால்மருகன் வாழுமிடம் நாடுகின்றோம்
முதியோரும் உறுதியுடன் இணைந்திட்டார்கள் சுவாமி
கதிர்காமப் பதிமுருகா அருள் செய்வாயே.

2. கார்த்திகைப் பெண்வளர்த்த கார்த்திகேயா
கந்தன் என ஆறுமுகம் இணைந்த நாதா
கூர் வேலைத் தாங்கிநிற்கும் கதிரைவேலா
குவலயத்தைக் காக்கவந்த வள்ளிபங்கா
மார்பினிலே கடம்பை அணி அழகுவீரா
மயிலேறும் ஆறுமுகா உமையின்மைந்தா
சீர்பெருகு நல் வழியைக் காட்டும் ஐயா சுவாமி
கதிர்காமப் பதிமுருகா அருள் செய்வாயே.

3. கிட்டிடாதோ உன்பாதம் எங்களுக்கு
கீர்த்திமிகு அசுரனையே மாய்த்த வேல்
பட்டதெல்லாம் போதுமய்யா சுவாமிநாதா
பிறப்பறுத்துப் பெருவாழ்வைத் தாரும் ஐயா
தொட்டதெல்லாம் துலங்கியே மகிழ வைத்தாய்
தொழில் சிறந்து ஊருக்கெல்லாம் உதவ வைத்தாய்
விட்டகுறை ஏதும் உண்டோ சொல்லுமையா - சுவாமி
கதிர்காமப் பதிமுருகா அருள் செய்வாயே.

4. கீதங்கள் பாடியே தேடி உந்தன்
கருணைமுகம் காணவே நாடி வந்தோம்
ஏதங்கள் அறுத்தெம்மைக் காக்க வேண்டும்
எண்ணிய நற்காரியங்கள் முடியவேண்டும்
வேத இதிகாசங்கள் புரியவில்லை
வேல்முருகன் புகழ்மட்டும் பாடி வந்தோம்
பேதமின்றிக் கேட்டவரம் தாரும் ஐயா சுவாமி
கதிர்காமப் பதிமுருகா அருள் செய்வாயே.

5. குன்றுகுழி பலவற்றைத் தாண்டி வந்தோம்
கூமுனையும் குமுக்கனையும் கடந்து வந்தோம்
பன்னிருகை வேலவனின் நாமம் சொல்லி
பிரார்த்தனைகள் கூட்டாகச் செய்து வந்தோம்
பன்றியுடன் கரடி புலி வாழும் காட்டில்
பயமின்றிப் பயணத்தைத் தொடர்ந்து வந்தோம்
அன்புடனே அரவணைத்துத் தென்பைத் தாராய் சுவாமி
கதிர்காமப் பதிமுருகா அருள் செய்வாயே.

6. கூவும் குயில் இசை கேட்டே மயில்கள் ஆடும்
குரங்கினங்கள் சலசலத்துக் கிளைகள் தாவும்
நாவுக்கு இனிய பாலைப் பழங்கள் மின்னும்
நாவலடி மடு கடந்து வந்தோம் ஐயா
பூவுல வாழ்விற்குப் பொருளும் வேண்டும்
புண்ணியங்கள் சேர்க்க உன் அருளும் வேண்டும்
வேவுபார்த்து வினை அறுத்துக் காப்பாய் ஐயா சுவாமி
கதிர்காமப் பதிமுருகா அருள் செய்வாயே.

7. கெஞ்சுகின்றோம் கண் திறந்து பாரும் ஐயா
கேடேதும் வந்திடாமல் காரும் ஐயா
அஞ்சுகின்றோம் கொடு நோய்கள் தடுத்திடையா
ஆறுமுகா ஆறுதலைத் தாரும் ஐயா
வெஞ்சினத்தால் பேரிழப்பு நேருதய்யா
வேரறுத்துச் சினம் தணிக்க வாரும் ஐயா
பஞ்சம் பசி நாட்டை விட்டு அகலவேண்டும் சுவாமி
கதிர்காமப் பதிமுருகா அருள் செய்வாயே.

8. கேடுவரும் முன்னரே உன் பாதம் தொட்டோம்
கெட்டவர்கள் இல்லாத உலகைத் தாரும்
கேடுகெட்ட மானிடரின் மனதை மாற்றி
கேண்மைமிகு மனிதராக்க வழியைக் காட்டும்
தோடுடைய செவியோனின் விழியில் பூத்த
தோகைமயில் வாகனனே முருகா வாராய்
வாடும் அடியார்கள் துயர் நீக்க வேண்டும் சுவாமி
கதிர்காமப் பதிமுருகா அருள் செய்வாயே.

9. கையளவே கற்றதென்று கதைகள் சொன்ன
ஔவை அவள் தமிழ் கேட்க ஓடி வந்தாய்
வியாழையாறு வள்ளியாறு கடந்து வந்தோம்
வீரைமரச் சோலையையும் தாண்டிவந்தோம்
ஓயாது உன் புகழைப் பாடி வந்தோம்
ஓங்கார ஓசை எதிர் ஒலிக்குதையா
சேயாக எமை அணைக்க வருவாய் ஐயா - சுவாமி
கதிர்காமப் பதிமுருகா அருள் செய்வாயே.

10. கொடுமை பல அனுபவித்து நொந்துவந்தோம்
கோழிக்கொடி தாங்கிடும் குமரா வாராய்
வாடுகின்ற மக்கள் துயர் தீர்க்கவேண்டும்
வடிவேலா நின்கருணை என்றும் வேண்டும்
நெடுநாளாய் நினைத்தபடி நடந்து வந்தோம்
நிர்மலனே நன்றி சொல்ல நாடி வந்தோம்
கடுகியே எம்முன்னே காட்சிதாராய் - சுவாமி
கதிர்காமப் பதிமுருகா அருள் செய்வாயே.

11. கோரிக்கை பெரிதாக ஒன்றும் இல்லை
கோவிந்தன் மருகனை நாம் காண வந்தோம்
வாரி இறைப்பதற்குச் செல்வம் வேண்டாம்
வறுமையின்றி வாழ்வதற்கு வழியைக் காட்டும்
மாரிமழை சீராகப் பொழியவேண்டும்
மக்களின் இகவாழ்வு சிறக்கவேண்டும்
பாரினிலே பட்டினியும் ஒழியவேண்டும் - சுவாமி
கதிர்காமப் பதிமுருகா அருள் செய்வாயே.

12. கவுந்தி அம்மை கண்ணகிக்குப் பாதை காட்ட
கோவலனும் கண்ணகியும் மதுரை சேர்ந்தார்
பவுத்திரமாய் உன்பதியை நாமும் சேர
பார்வதியின் பாலகனே வழியைக் காட்டு
கவுரி தந்த வேல் பெற்ற சக்திவேலா
கதிரைமலை கண்ட இடம் தாண்டி வந்தோம்
மாவுவிளக் கேற்றியே புறப்பட்டோமே - சுவாமி
கதிர்காமப் பதிமுருகா அருள் செய்வாயே.

13. மருதமுடன் குறிஞ்சி முல்லை சேர்ந்த மண்ணில்
மாணிக்ககங்கை பாய்ந்து வரும் அழகு ஊரில்
பொருதவென்று பாசறையும் அமைத்தான் வேலன்
பத்மாசுரன் உடலை இருகூறாய் ஆக்கி
பெருமனதாய் சேவலும் மயிலும் ஆக்கி
பேருவகை அடைந்து அங்கு தங்கி வாழ்ந்தே
அருள் செய்யும் ஏமகூடம் கண்டு கொண்டோம் - சுவாமி
கதிர்காமப் பதிமுருகா அருள் செய்வாயே.

14. தேவயானை தூதுவிட்ட முனிவர் மூவர்
சண்முகனைத் தேடியே புறப்பட்டார்கள்
ஆவலுடன் வந்தவரில் இருவர் மாள
அகத்தியரின் யோசனையை ஒருவர் கேட்டார்
நாற்பது கோணஅச் சரங்கள் தன்னை
பொற்றகட்டில் அழகுறவே பதியவைத்தே
கல்யாணகிரி முனிவர் தவம் இருந்தார் - சுவாமி
கதிர்காமப் பதிமுருகா அருள் செய்வாயே.

15. கந்தனும் வள்ளியுமே சிறுவராகி
கல்யாணகிரியாருக்குச் சேவை செய்தார்
நொந்து தவம் முடித்திடவே நினைத்த கந்தன்
தவம் கலைத்து முருகனாகக் காட்சி தந்தார்
பந்தமுடன் தெய்வானை வள்ளியோடு
பாசமுடன் இங்கு வாழ்வோம் உறுதி என்றார்
முத்துலிங்க சமாதியின் கதையைக் கேட்டோம் - சுவாமி
கதிர்காமப் பதிமுருகா அருள் செய்வாயே.

16. காஸ்மீர மன்னனின் மகளானாலும்
கந்தனுக்குத் தொண்டு செய்தே சமாதி ஆனாள்
கண்டிராசன் பெண்கேட்டும் மறுத்தே நின்றாள்
பாலசுந்தரி கதையை வியந்து கேட்டோம்
தெய்வானை அம்மனின் கோவில்ப்பக்கம்
லிங்கமே உருவான சமாதிகள் கண்டோம்
பால்குடிபாபாவி பள்ளி என்றார் - சுவாமி
கதிர்காமப் பதிமுருகா அருள் செய்வாயே.

17. செல்லக் கதிர்காமமும் கண்டுவந்தோம்
செழிப்பான கங்கை நதிச்சோலை கண்டோம்
சொல்லொண்ணா மகிழ்ச்சியிலே நாம் திளைத்தோம்
செம்மண்ணில் தினைப்புனத்தின் காட்சி கண்டோம்
மதுரைமர நிழல் தேடிப் பொங்கல் வைத்தோம்
மாணிக்கப் பிள்ளையாரின் பூஜை கண்டோம்
கதிரைமலை வேலனையும் கண்டு வந்தோம் - சுவாமி
கதிர்காமப் பதிமுருகா அருள் செய்வாயே.

18. காட்டுவழி நடந்தே கதிர்காமம் சென்றோம்
கந்தனாகி உதவிய பல மனிதர் கண்டோம்
பாட்டும் பண்ணிசையும் பாடிவந்தோம்
பிறருக்கு உதவ முந்தும் கரங்கள் கண்டோம்
பகிர்ந்துண்ணும் பக்குவமும் உயரக் கண்டோம்
பண்பட்ட மானுடத்தின் குழுக்கள் கண்டோம்
மகிமைகள் பல கண்டோம் மகிழ்ச்சி கொண்டோம் - சுவாமி
கதிர்காமப் பதிமுருகா அருள் செய்வாயே.

19. ஏறுமயில் ஏறி விளையாடுமுகம் ஒன்று
ஈசருடன் ஞானமொழி பேசும் முகம் ஒன்று
கூறுமடியார்கள் வினை தீரத்தமுகம் ஒன்று
குன்றுருவ வேல்வாங்கி நின்றமுகம் ஒன்று
மாறுபடு சூரரை வதைத்த முகம் ஒன்று
வள்ளியை மணம் புணரவந்த முகம் ஒன்று
ஆறுமுகம் ஆனபொருள் நீஅருளல் வேண்டும்
ஆதி அருணாசலம் அமர்ந்த பெருமாளே.

திரு.இரா.தெய்வராஜன்
திருக்கோவில்

# திருக்கோவில் திருப்பதிகம்

தரணி புகழ் மேவுதிருக் கோவில் வாழும்
சண்முகனே உன்மீதில் பதிகம் தன்னை
அரவணிந்தோன் தன்னருளால் அடியேன் சொல்ல
அருள்புரிவாய் ஆனைமுக முடையகோவே
வரமருள வேணுமம்மா வாணியென் மேல்
மாதாவே யோர்குறையும் வராவண்ணம்
சிகரமுறுந் திருக்கோவி லுறையும்தேவே
சுவாமி சித்திரவே லாயுதனே ரெட்சிப்பாயே.

தாங்கவொண்ணா நோயதனா லடியேன்மிக்க
சஞ்சலங்கள் பட்டுமனந் தயங்கிவாடி
ஏங்கியே புலம்புகிறேன் ஐயா நீயும்
எளியேனின் பிணியதனை அகலச்செய்வாய்
மாங்கனிக் காகவென்று மயில் மீதேறி
வலமாக வந்தெதிர்த்த வள்ளி வாழ்வே
கோங்குமர மேவுதிருக் கோவில் வாழும்
சுவாமி சித்திரவே லாயுதனே ரெட்சிப்பாயே.

திகழுமணி முடியாறும் முகங்களாறும்
திருக்கரங்க ளீராறும் சீர்கொள் வேலும்
புகழ்பெருகு வள்ளி தெய்வ யானையோடு
புள்ளிமயில் மீதேறிப் புகலுந்தேவா
என் அகமதிலே உற்றதுயர் தன்னையுந்தன்
அருள் வேலால் அறுத்தெறியும் அமரர்கோவே
சிகரமுறுந் திருக்கோவிலுறையுந்தேவே
சுவாமி சித்திரவே லாயுதனே ரெட்சிப்பாயே.

தீராகுஷ்ட மொடுவாத பித்தம்
சிலேட்டுமங்க ளுள்ள தொரு தீமையெல்லாம்
வாராதே யுந்தனிட நாமங் கேட்டால்
வழிவிலகி யோடுமே வடிவேலோனே
காரானை முகற்கிளைய கந்தவேளே
கருத்துடனே வந்தெனக்கு வரங்கள் தாராய்
தாராருந் திருக்கோவி லுறையுந் தேவே
சித்திரவே லாயுதனே ரெட்சிப்பாயே.

துன்பங்க ளணுகிடுமோ ஐயாவுன்னைத்
தொழுதோற்குப் பழுதொன்று வருமோசாமி
அன்பாக அடியேன்சொல் விண்ணப்பத்தை
அப்பனே கேட்டு உந் னருளேசெய்வாய்
வன்போடு மாமனைமுன் வதைத்தமாயன்
மருகனெனச் சரவணையில் வந்ததேவே
தென்பகுதி மேவுதிருக் கோவில் வாழும்
சித்திரவே லாயுதனே ரெட்சிப்பாயே.

தாவிமயில் மீதேறி அடியேன் முன்னே
தோன்றியென் மீதிலுற்ற துயரந்தன்னை
ஏவலோடு பேய் பில்லி சூனியங்கள்
எல்லாமுன் கைவேலா லெறிந்தேநீக்காய்
காவிலுறை மானுடனே மழுவுமேந்தும்
கண்ணுதலோ னீன்றெடுத்த கந்தவேளே
தீவினைகள் போக்குதிருக் கோவில்வாழும்
சித்திரவே லாயுதனே ரெட்சிப்பாயே.

தெய்வானை தன்கொழுந னென்னாமுன்னந்
தேவர்தனக் குற்றபெருஞ் சிறையைமீட்டாய்
எந்தாயே எழியேன் செய் விண்ணப்பந்தான்
எந்தையேயுன் செவியேறா திருப்பதேனோ
கொல்வாயென் நோய்பிணிகள் குலைந்தேஓடக்
கொற்றவனே அடியேன்மேல் சித்தம் வைத்து
செய்வாய்நீ திருக்கோவி லுறையுந்தேவே
சித்திரவே லாயுதனே ரெட்சிப்பாயே.

தேடுதற்கு மெட்டாத பெருமானீன்ற
செல்வன் நீ மெய்ப்பொருளே எளியேன் மிக்க
வடுகின்றே னையாவென் முன்னே வந்து
வல்பிணிகள் நீங்கவரம் நல்கவேணும்
சாடியே வாகூரப் பொருப்பைக்கூறாய்
தகர்த்து வெள்ளை நாவலிலே தங்குந்தேவே
தேடுதமிழ் மேவு திருக்கோவில் வாழும்
சித்திரவே லாயுதனே ரெட்சிப்பாயே.

தையல்நல்லார் தங்களுக்கு அடிமையாவேன்
சாமியுன் சேவடிக்கு ஏவல் செய்வேன்
மையலே நினைவாகித் திரிந்தேனல்லால்
வள்ளலே யுன்பாதம் மனதிலில்லை
மெய்யனே இவ்வெளியேன் பிரேமைநீங்கி
மோட்சவீ டளித்தருளும் முருகவேளே
திவ்யபுகழ் மேவுதிருக் கோவில் வாழும்
சித்திரவே லாயுதனே ரெட்சிப்பாயே.

தொட்டதண்டு பாசமுடன்சூலங் கொண்டு
துரிதமொடு கடாவேறி இயமன்தானும்
கட்டியே இழுத்து எந்தன் ஆன்மாதன்னை
கலக்கமது செய்யமுன்னங் கர்த்தனேநீ
வட்டமிடும் பச்சைமயில் மீதிலேறி
வடிவேலுங் கரமிலங்க வருவீரையா
திட்டமுடன் திருக்கோவி லுறையுந்தேவே
சித்திரவே லாயுதனே ரெட்சிப்பாயே.

தோராத வலிமைபெற்ற சூரன்தன்னைச்
சுடர்வேலா லறுத்டிதறிந்த துரையேயென்முன்
வாராயோ வள்ளிதெய்வ யானையோடு
வடிவேலே இதுசமயம் வருகின்றேன் நான்
பாராரும் பார்த்தன்வில் லடியும்பட்டு
பாசுபத மீர்ந்தருளும் பரமன்சேயே
சேராயோ திருக்கோவி லுறையுந்தேவே
சித்திரவே லாயுதனே ரெட்சிப்பாயே.

தௌவையெனை அணுகாமல் காக்கவேணும்
சண்முகனே யுன்பாதந் துதிக்கவேணும்
ஔவியங்கள் பேசாம லிருக்கவேணும்
ஆண்டவனே என்பிணிக ளகலவேணும்
செய்ய கந்தவெற்பதனில் பிரமன் தன்னை
சிறை செய்த மெய்ப் பொருளே செந்திவேலே
திவ்யபுகழ் மேவுதிருக்கோவில் வாழும்
சித்திரவே லாயுதனே ரெட்சிப்பாயே.

இத்தலத்திற் கற்றறியாச் சிறியேன்யானும்
ஏந்தலே யுன்மீதி லன்புகொண்டு
பத்துடனே மூன்றுதிரு விருத்தந்தன்னைப்
பாடினே னிவ்வெளியேன் பலருஞ்சொல்லி
நித்தமுமிப் பாடல்தனை நினைப்போர் தங்கள்
நீடுவினை தீர்த்தருள்வாய் நிமலர் கோவே
சித்தமுறுந் திருக்கோவில் வாழுகின்ற
சித்திரவே லாயுதனே ரெட்சிப்பாயே.

திரு.சி.பொ.த.வில்லியம்பிள்ளை அவர்கள்
தம்பிலுவில்

# சித்தாண்டி கந்தசாமிபேரில் தோத்திரப் பத்து

- திருச்சிற்றம்பலம்-

மண்டலத்திலுன்னையல்லா லெனக்கு வேறு
வந்துதவி செய்வாரைக் காணேனையா
கன்றிழந்த பசுப்போலக் கலங்கிறேன்யான்
காருமையா கருணைவைத்துக் கார்த்திகேயா!
பண்டுமறை சிறத்திலங்க உனது பாதம்
பணிந்தேன் யான் பலநாளும் பாரும் கண்ணால்
இன்றெனது மனத்துயரம் அகற்றியாள்வாய் - சுவாமி
சித்தாண்டி நகரிலுறை தேவாபோற்றி!

மாதா பிதா வுன்னையன்றிவேறு
வையகத்திலெனக் கொருவரில்லையென்று
வேதாந்தமான சிவனார் மைந்தா
விரும்பினேன் உன்பதத்தை யானும்காண
சூதாடிப் பஞ்சவர்கள் தோற்றவண்ணம்
துயர் கொண்டேன் துணையில்லாப்பாவியானேன்
சீராக உன்பாதந்துதிப்பேனையா - சுவாமி
சித்தாண்டி நகரிலுறை தேவாபோற்றி!

மின்ன லென்னு மொளிபோலுன் பாதந்தன்னை
விரைவுடனே எனது கண் ணெதிரிற்காட்டி
மன்னவனே எனது துயர்தீர்த்து நீயும்
மனமகிழ்ந்து கிருபை செய்வாய் வானோர் கோவே!
கன்னல் செறி பூங்குழலாள் வள்ளியம்மை
கண்டு மனம் மகிழ்ந்திருக்கும் கந்தவேளே
சிந்தனையில் முகமாறுங் காணவாமுன் - சுவாமி
சித்தாண்டி நகரிலுறை தேவாபோற்றி!

மீனமுடன் பன்னிரண்டு ராசியோடு
வினையுடனே ஒன்பது கிரகம் சேர்ந்து
ஆனதுயர் கொண்டலையச் செய்த என்னை
ஆதரித்து ஆளுமையா அரனார்மைந்தா
மானீன்ற பூங்கொடியாள் வள்ளியம்மை
மா தெள்ளிக் கொடுக்கமுன்னாள் உண்டதேவே!
தேனுண்டகனிவாயா திவ்யரூபா - சுவாமி
சித்தாண்டி நகரிலுறை தேவாபோற்றி!

முப்புரத்தை நீறாகச் செய்தோன் மைந்தா
முன்வந்து எனதுதுயர் தீர்க் கொண்ணாதோ
இப் புவியில் உனையல்லால் எனக்குவேறு
எவர்துணை செய்வார் என்றிருக்கின்றாயோ?
கற்புடைய வள்ளியம்மை பரணின் முன்னே
கதிர்வேங்கை மரமாகி நின்றகோவே!
செப்பமுடன் உன்பாதந்துதித்தேனையா - சுவாமி
சித்தாண்டி நகரிலுறை தேவாபோற்றி!

மூர்க்கமுள்ள சூரர்களை வதையே செய்தாய்
முன்நாளிற் பிரம்மாவைச் சிறையில் வைத்தாய்
பார்க்கவே தந்தைக்குபதேசம் சொன்னாய்
பார்வதியாள் புத்திரனே பழனிவேலா!
காக்க வரவேணு மென்னைக் கந்தவேலா
கவலைமிகக் கொண்டுமனங் கலங்கிறேன்யான்
தீர்க்கமாய் உன்பாதந்துதிப்பேனையா - சுவாமி
சித்தாண்டி நகரிலுறை தேவாபோற்றி!

மெய்சொல்லி ஒருபோதும் பொய் சொல்லாமல்
விரும்பியே உன்பாதம் வணங்குவோர்க்கு
வையகத்தில் செல்வமுறும், பிணியுமில்லை
வாழ்வுமிக உண்டாகும் மகிழ்ச்சி ஐயா
பையரவு, புலி, கரடி, பன்றிதானும்
பறந்தோடிப் போகுமல்லோ பகைவராமல்
செம்மையாய் உன்பாதந் துதிப்பேனையா - சுவாமி
சித்தாண்டி நகரிலுறை தேவாபோற்றி!

மேதினியில் உனதுதுணை யிலாதெனக்கு
வினைதீரத்து அருள் செய்வாரில்லை ஐயா
பாதகஞ்செய் மடவார்கள் மயலிற் சிக்கிப்
பலநாளும் கவலை கொண்டு பதறினேன் யான்,
தீரமுள்ள எமதூதர் என்னைத் தொல்லை
செய்யாமல் உன்னுடைய செயலைக் காட்டும்!
சீராக உன்பாதந்துதிப்பேனையா - சுவாமி
சித்தாண்டி நகரிலுறை தேவாபோற்றி!

மைவிழியார் மடவார்கள் நடனமாட,
மாதவர், தேவர், முனிவர் கீதம்பாட .
ஒளவையார் தனக்கு அருள் கொடுத்த மூர்த்தி
அடியேன் நான் படுந்துயரம் அகற்றியாள்வாய்!
கவ்வையொத்த கலையிழந்த கலைமான் போலக்
கலங்கியே மனம்மெலிந்து வாடுதிப்போ
செவ்வையாய் மனத்துயரமகற்றியாள்வாய் - சுவாமி
சித்தாண்டி நகரிலுறை தேவாபோற்றி!

மொழிமடவார் அரம்பையொடு திலோத்தமையும்
மூர்க்கமுள்ள மேனகை, ஊர்வசியுங்கூடி
அனுதினமும் நடம்புரியும் தேவர்கோன்தன்
அரும்புதல்வி தனைமணந்த ஐயாவேலா!

பழுதொன்றும் வராமல் காக்கவேணும்
பார்வதியாள் மைந்தாவுன் பட்சம் வைத்து
சீராக உன்பாதந் துதிப்பேனையா - சுவாமி
சித்தாண்டி நகரிலுறை தேவாபோற்றி!

மோட்சமெனும்கயிலய நாதர் தன்னை
முன்நாளில் நந்தீசர் மனதிலெண்ணிக்
காட்சிகேட்டுத் துயரமுற்று இருக்கும்போது
கருத்தறிந்து கருணை செய்தார் கடவுள்தானும்
மாட்சிமைசேர் உன்னைவிட எனக்குவந்து
வலியவந்து உதவி செய்வார் காணேனையா
மீட்சிபெறவுன்பாதந்துதிப்பேனையா - சுவாமி
சித்தாண்டி நகரிலுறை தேவாபோற்றி!

மௌனமாய் நீயிருந்தா லெனக்கு வேறு
வந்துதவி செய்வார்கள் யாருமில்லை
சூரர்தன் படையவியச் செய்ததீரச்
சுந்தரனே ஆளுமையா அடியேன்தன்னை
கவணெறிந்த வள்ளியம்மன் தன்னை நாடிக்
கானகத்தில் வேடுவனாய்ச் சென்ற தேவா,
தவியாமல் எனைக் காக்க வேணுமையா - சுவாமி
சித்தாண்டி நகரிலுறை தேவாபோற்றி!

இம்மானிலத்திலுனை நம்பிநானும்
இதுவரையும் தோத்திரப்பா இசைத்துநின்றேன்
கம்மென்ற நாதமணி மேளத்தோடு
கற்பூர வாசனையும் கமழ்ந்துவீச
நம்பியே யுன்பாதம் பணிந்தேனையா
நன்மை செய்து துயரகற்றிக் காக்கவேணும்
செம்மையுற வுன்பாதந்துதித்தேனையா - சுவாமி
சித்தாண்டி நகரிலுறை தேவாபோற்றி!

- திருச்சிற்றம்பலம்-

அறுபது சில்லறைக் கோர்வை பக்கம் 184 - 18[illegible]

# உகந்தை முருகன் பாமாலை

ஓங்கார பிரணவத்தில் உதித்த கோவை
உண்மையுடன் துதிப்போருக்கு உதவும் வேலைப்
பாங்குடனே பாமாலை பராவ நேர்ந்து
பரமசிவன் முதல்மகனைப் பணிந்துவாழ்த்தி
ரீங்கார இசையெழுப்பும் கமலவாணி
திண்மையுடன் என்நாவில் திளைத்த ஊற்றறாய்
நீங்காது உடன் நின்று நிலைக்க வேண்டும்
நினைத்த பலன் நீயருள வேண்டும்தாயே!

அடியவர்கள் குறைதீர்க்கும் அழகார்மைந்தா
அலைகடலின் திரையொலிக்க அமர்ந்தாய் போற்றி
படியேறி மலையேறிப் பார்க்க வந்தோம்
பார்பதியாள் புத்திரனே கார்த்திகேயா
கடியவனம் உனைச்சூழக் கண்டோர் ஏங்கக்
கருணைமழை பொழிந்தன்பர்க் கருள்செய்தேவே
உதவியிலேன் உனைத்தேடி வந்தேனையா
உகந்தமலைக் குடையோனே துணை செய்வாயே!

ஆசையெல்லாம் புவியதனில் அலைப்பக்கண்டும்
அழிகின்ற உடலமிதை அணியென்றெண்ணிக்
காலமெலாம் அவமேயான் கழித்துவிட்டேன்
கருத்தற்ற வாழ்க்கைநிலை வாழ்ந்து வந்தேன்
பாசமெல்லாம் உலகத்தின் மேலே கொண்டு
பாவி நான் வாழ்ந்த நாள் வெறுமையாச்சு
உற்றவழிக் குதவுதுணை ஐயாவேலா
உகந்தமலைக்குடையோனே இரட்சிப்பாயே!

இச்சையுடன் உனதுபதி நாடிவந்தேன்
பன்னிருகையும் நீட்டிஎனை அழைக்கவேண்டும்
பச்சைமயில் வாகனனே பாரோர்ஏத்தும்
பார்வதியாள் புத்திரனே பழனிநாதா
கத்துகின்ற வனவிலங்கின் நடுவேவாழும்
கருணையொளி தவழ்கின்ற உகந்தைவாசா
உத்தமியாள் புத்திரனே உலகம் போற்றும்
உகந்தமலைப் பதியோனே கடைக்கண் பாராய்!

ஈசனுக்கு பிரணவத்தை உபதேசித்தாய்
இரக்கமின்றிப் பிரமனையே சிறையிலிட்டாய்
சூரனுக்கு ஞான உபதேசம் செய்தாய்
சுப்பிரமணியனெனும் நாமம்பெற்றாய்
கானமயில் நடனமிடக் குயில்கள்கூவக்
கண்டுகளிப் பெய்துகின்ற கந்தவேளே
ஊனமுறு இவ்வுடம்பு நிலைத்ததில்லை
உகந்தமலைப் பதியோனே உதவுவாயே!

உலகமெலாந் தனியரசாய்த் தானே ஆள
உறுதி கொண்டு உனது தந்தை பாதம் நாடிப்
பெருந்தவத்தால் பேறுபெற்ற சூரபத்மன்
பேருலகத் தவர்க்கிழைத்த பெற்றிகண்டு
சரவணத்தில் வந்துதித்த சண்முகாநீ
தையல்வள்ளி நாயகியின் தலமைந்து
உளமகிழ்ந்து தேன்தினைமாஉண்ட கோவே
உகந்தமலைப் பதியோனே அருள் செய்வாயே!

ஊண்இன்றி உறக்கமின்றி உன்னைத்தேடி
உத்தமனே பலகோடி உருகிநிற்க!
கானகத்தில் ஓடியொழித்திருக்கலாமோ
கல்மனதோ உன்நெஞ்சம் கார்த்திகேயா
தேனமிழ்தத் தமிழாலே முருகா உன்னைத்
திருப்புகழ்கள் திருமுறைகள் இசைத்துநின்று
ஊழியெல்லாம் துதித்திடுவேன் முருகாஜயா
உகந்தமலைப் பதியோனே துணை செய்வாயே!

எல்லாளன் ஆண்டஇந்த இலங்கை மண்ணில்
இச்சை கொண்டாய் எனது குருநாதா நீதான்
பொல்லாத அரக்கர்களைப் பொடித்தபின்பே
போயுறைந்தாய் கதிரமலை என்பார் முன்னோர்
அண்ணல்நபி புத்தரோடு முத்துலிங்கர்
அமர்ந்திட்டார் உன்னிடத்தில் அருளேநாடி
பொல்லாத வினைகளைந்து காப்பாய் கந்தா
பொதிகைமலை உடையோனே உகந்தைவாசா!

ஏறுமயில் ஏறிவிளையாடுகின்ற
இளமுருகா உனை நாடி வந்தேனையா
வீணாளாய்ப் போனதில்லை வினைதீர்த்தாண்ட
வித்தகனே காத்து அருள் செய்ய வேண்டும்
தீராத வினைகலெல்லாம் தீர்க்குந்தேவே
திருச் செந்தூர் தனிலுறையுந் தேவதேவா
ஊறுசுனை உனது அருள் பாபம் தீர்க்கும்
உகந்தமலைப்பதியோனே அருளைத்தாராய்

ஐயனே உனது அருள் விளக்கமின்றி
அகங்கார சாகரத்தில் மூழ்கி மூழ்கிப்
பொய்யான வாழ்வு கொண்டு மாயையென்னும்
பொறியிலகப்பட்டு இன்னும் கடைத்தேறாமல்
மெய்ஞான வாழ்வுதனை மெச்சிவேண்டி
வித்தகனே உனதுபதி தேடிவந்தேன்
தைதாவென்றே ஒலிக்கும் சதங்கை நாதம்
சண்முகா உகந்தையிலே காட்சி தாராய்

ஒறுத்தெனது வீண்வாழ்க்கை ஒழித்துவிட்டேன்
ஒண்பொருளும் நானறிய விழைந்துவிட்டேன்
பகுத்தறிவுக் கொள்கையிலே பாசங்கொண்டு
பரந்தாமா உனைமறந்தேன் பாவியானேன்
பொறுத்தென்னை ஆட்கொள்ள வேண்டுமையா
பொய்கைதனில் வந்துதித்த புனிதவேளே!
உதயகிரி உனதுபதி உவப்பாருக்கு
உகந்தமலைப் பதியோனே காக்கவேண்டும்

ஓடமதில் அகப்பட்ட பறவை ஓர்நாள்
உலாவஎண்ணி நாற்றிசையும் பறந்து சென்று
கார்முகிலின் பாற்பட்டும் கரைகாணாது
கலங்கியே மயங்கியது திரும்பினாற்போல்,
நீள்உலக ஆசையிலே ஊறி ஊறி
நிர்மலா உனைத்துதிக்க நேரமின்றி
ஊமையாய் வாழ்ந்துவிட்டேன் ஊமையாள்மைந்தா
உகந்தமலைப் பதியோனே சேவித்தேனே!

ஔவைக்கு உபதேசம் செய்தவேளே
அறுமுகனே உனையணுகா உளமெதற்கு?
கைதான ஆயிரவர் கார்த்திகேயா
காலன்கைப் பட்டுழலும் காலமீதில்
மெய்ஞ்ஞான உன்புகழைக் கீரன்பாட
வேலவா புனர்வாழ்வு பெற்றார் உன்னால்
உய்வுபெறு வாழ்வையெண்ணி வந்தேனையா
உகந்தமலைப் பதிக்கிறைவா துணைசெய்வாயே!

கரந்தையிலே தமிழ்வளர்த்த கந்தா உன்னைக்
காணவே பலகோடி பக்தர்கூட்டம்
தினந்தினமும் வந்து வந்து சேருதையா
சிறு பிழைகள் பொறுத்தெம்மைச் சேய்நீகாக்க
பொருந்து சுனை ஏழுள்ள உன்பதிக்கே
புண்ணியா பாபவினை தீர்க்குந் தீர்த்தம்
குருந்தைமர நிழலுறங்கும் சிவனார் மைந்தா
குறைகளைந்து அடியவர்க்கு அருள் செய்வாயே!

சரித்திரத்தில் மறைந்திட்ட சலவை நாடு
சண்முகா உனது பதிக் கண்மைமேவி
இருந்திடினும் பாழடைந்த காடேயாகி
இருப்பதற்குக் காரணங்கள் யாதுதானோ?
மறந்தடியார் வாழ்ந்ததனால் வந்தபேறோ?
வனவிலங்கிற் கிருப்பிடம் நீ தேடினாயோ?
பொருந்துகின்ற சதங்கைஒலி ஆர்ப்பரிக்க
புண்ணியா உகந்தையிலே தோற்றுவாயே!

- திருச்சிற்றம்பலம்-

திரு.இ.விநாயகமூர்த்தி
காரைதீவு

# மண்டூர் முருகன் மாலை

## காப்பு

திரு வளருந் தில்லை மண்டூர் உதித்த வேலன்
திருவடியை நான் நினைந்து சிறப்பாய்ப்பாட
வரும் பிழைகள் தனையகற்றி வழியே செய்வாய்
வல்லவனே மறை முதலே வலவை பங்கா
உருகியே உள்ளத்தில் உணர்ச்சி பொங்கி
உதித்து வருங் கவிதைக யிருந்தாராய்
அரும்பொருளே நற்றமிழை அழகாய் மேரு
மலைதனில் எழுதி வைத்த வல்லோனே

## நூல்

(அ) அப்பனே வேல் முருகா ஐயா வா வா
அடியேனின் துயரனைத்தும் அகற்றவாவா
இப்பவா இது தருணம் வீதியெல்லாம்
விளையாடித் திரிகின்றாய் விடவே மாட்டேன்
செப்புகின்ற அடியார்கள் முழக்கங் கேட்டுன்
செவி செவிடாய்ப் போனதோ சொல்வாயையா
எப்ப வென்னை எடுத்தேற வைப்பாய் மண்டூர்த்
தில்லையிலே வந்துதித்த தங்கவேலே

(ஆ) ஆருமற்ற பாவியென்றே நினைக்கிறார்கள்
ஆதரிப்பாயாண்டவனே குருவிக் கூட்டைப்
பாருலகில் குரங்கு பிய்த்த கதையைப் போலே
பரிதவித்தேன் வல்லசுரர் சூட்சியாலே
சோருமிந்த அடியார்க்கு போரில் வென்ற
சுடர் வடி வேலிங்கிருக்கோ இல்லைதானோ
பாருமிதை வாவி புடை சூழும் மண்டூர்த்
தில்லையிலே வந்துதித்த தங்கவேலே

(இ) இச்சை கொண்டு இப்புவியில் எடுத்த தேகம்
இது நிலையாய் நிற்காதென்றறிந்திடாயோ
மிச்சமாய்ச் சிலவருடந் துயரப்பட்டேன்
மெய்வருந்தி நோயாலும் மெலிந்து போனேன்
பச்சை மயிலேறி வந்து காப்பதானால்
பல நாட்கள் செல்லாமல் வரவும் வேணும்
அச்சமுடனுனைப் போற்றியழுதேன் மண்டூர்த்
தில்லையிலே வந்துதித்த தில்லைவேலே

(ஈ) ஈசனருள்ப் பொறியாலே வந்ததென்பார்
ஈன்றெடுத்தார் கார்த்திகைப் பெண்களென்பார்
வாசமுறு சரவணத்தே உதித்த தென்பார்
வந்ததொரு ஆறுமுகத் தோற்ற மென்பார்
பாசமறு அசுரர்களை வென்ற தென்பார்
பாங்கான கந்தனென்று பேருஞ் சொன்னார்
நேசமுடன் நான் காண வருவாய் மண்டூர்த்
தில்லையிலே வந்துதித்த தங்கவேலே

(உ) உள்ளத்தில் ஓயாத கவலை கொண்டேன்
உற்றார்கள் உறவினராலே பகையுங் கொண்டேன்
எள்ளியே சத்துருக்கள் பேசக் கேட்டேன்
மீளாத கடனுனளுஞ் சூழக் கண்டேன்
துள்ளுகின்றமைந்த ரெல்லாம் வறுமையாலே
துடித்திடவுங் கணடேன் துயரம் நீங்க
வள்ளி தெய்வானையோடு வருவாய் மண்டூர்த்
தில்லையிலே வந்துதித்த தங்கவேலே

(ஊ) ஊரார்கள் பல கோடி யுன்னைத் தேடி
அரோகரா வென்று சொல்லி ஆடியோடி
நேராக வந்திறங்கி வீதியெல்லாம்
விளையாடி உன் புகழைப் பாடக் கண்டேன்
பாராமல் விமானத்தில் இருக்கின்றாயோ
பாவையர்கள் தீபத்தில் மயங்கினாயோ
தீராத வினையகற்ற வருவாய் மண்டூர்த்
தில்லையிலே வந்துதித்த தங்கவேலே

(கி) கிடு கிடுத்து நடுங்குதையோ உடம்பு எல்லலாம்
கிறு கிறுப்பு வந்து மதிமயங்குதையோ
பட படெனமனமது தான் பதைத்து மூளை
பல விதமாய் யோசித்து விறைக்குதையோ
தட தடெனத் தடுமாறித் தயங்றேன் நான்
தக்கதொரு சமயமிது தவறிடாமல்
கட கடென மயில்மீதில் வருவாய் மண்டூர்த்
தில்லையிலே வந்துதித்த தங்கவேலே

(கீ) கீரி சர்ப்பம் எலி பூனை பருந்து தேரை
கிக்கிலுப்பை வண்டு புலி பசுவும் கூடி
பாரினிலே ஒற்றுமையாய் வாழுங்காலம்
பலவாண்டு செல்லுமோ கலியுகத்தில்
ஊரினிலே மானிடர்கள் பொறாமை நீங்கி
வஞ்சனை பொய் பேசாமல் வாழ்வதெப்போ
நீரிதற்கு அருள் புரிய வருவாய் மண்டூர்த்
தில்லையிலே வந்துதித்த தங்கவேலே

(கு) குடியென்னும் வல்லசுரர் கூட்டமொன்று
குதித்து விளையாட மக்கள் வருந்திறார்கள்
வடிவாக மண்டூரில் முளைத்த வேலை
மதுவரக்கனை வதைக்க எடுக்கொணாதா
இடியிடித்து வேல் கொண்டு ஈழநாடு
எங்கணு மேயில்லாமல் அகற்றவேணும்
படித்துஉன்னைப் பலதரமும் பணிந்தேன் மண்டூர்த்
தில்லையிலே வந்துதித்த தங்கவேலே

(கூ) கூத்தாடுங் கூட்டமிது உலகிலென்று
கூறுகின்றார் பெரியார்கள் உண்மைதானோ?
சேர்த்தாள வேணுமென்று கூத்துப் போட்டேன்
ததிங்கிணத்தோம் தாளமொன்று வரவேயில்லை
பார்த்தாயோ அதை நீயும் பழக்கிடாயோ
பக்தியுடனே நானும் பணிந்து கேட்டேன்
கீர்த்திபெறு செந்நெல் விளை பதியாம் மண்டூர்த்
தில்லையிலே வந்துதித்த தங்கவேலே

(கெ) கெட்டு நொந்து வாழுவது நீதிதானோ
கேலி பண்ணுஞ் சித்திரமோ உலகில் நானோர்
பட்டுவிட்டேன் துயரமினித் தாங்கொணாத
பார்பதியாள் பாலகனே பணிந்தேனுன்னைத்
திட்டமுடன் திருநீறு பூசி நாளும்
தீர்த்தமெலா மாடி உன்னைத் துதித்தேனையா
வட்டமிடும் புள்வயல் சூழ் பதியாம் மண்டூர்த்
தில்லையிலே வந்துதித்த தங்கவேலே

(கே) கேது வெள்ளி திங்கள் செவ்வாய் புதன் வியாழன்
சனி ராகு ஞாயிர் நவக்கிரகமெல்லாம்
வாது செய்து எந்தனையே வருத்தா வண்ணம்
வடிவேலா அர்ச்சனை செய்தழைத்தேனுன்னை
ஓதுகின்ற சடாட்சரத்தின் ஒளியாய் வந்து
உள்ளத்தின் கவலையிருள் நீக்கியாள்வாய்
மாது வள்ளி தெய்வானை பங்கா மண்டூர்த்
தில்லையிலே வந்துதித்த தங்கவேலே

(கை) கைகள் பன்னிரண்டுடனே முகங்களாறும்
கடம்பணிந்த புயந்தாங்கும் இடையும் வேலும்
மெய்யெங்கும் விபூதியுடனே உருத்திராட்சம்
மேலாக விளங்கியதோர் மார்புங் கொண்டு
தையலர்கள் வள்ளி தெய்வ யானை கூட்டித்
தானிறுகப் பிணித்து வர்ணமயில் மீதேற்றும்
வையகத் தோர் சித்திரத்தைப் பணிந்தேன் மண்டூர்த்
தில்லையிலே வந்துதித்த தங்கவேலே

(கொ) கொட்டு தவில் சங்கி னொடு குழலு மூதிக்
கொடிச்சீலை பிடித்து முகங்களையுந் தூக்கி
வட்ட வடிவான பட்டுக் குடைகீழுன்னை
வடிவாகக் கோயிலார் கொண்டு வாறார்
கட்டியே இலை குழை வில் லம்புங் கொண்டு
கடுகியே வேடர் நடம் புரியக் கண்டு
குட்டினேன் கும்பிட்டேன் குமரா மண்டூர்த்
தில்லையிலே வந்துதித்த தங்கவேலே

(கோ) கோலமதாய்த் தில்லையில் வந்துதித்த வேலைக்
கோதை வள்ளி நாதனுந்தன் கதிர்வேலென்று
ஞாலமெல்லாந் தானறியக் கோயில் கட்டி
நாளாந்தம் பூசை செய்து போற்றக் கண்டேன்
"ஆல வம்மி" நிழல் சூழ்ந்த அகன்ற வீதி
ஆவணியில் விமானத்தில் வரவுங் கண்டேன்
சீலமுடனனைப் போற்றித்துதித்தேன் மண்டூர்த்
தில்லையிலே வந்துதித்த தங்கவேலே

கௌ) கௌவுகின் நாய் நரிக்கோ காக்கைக்கோ தான்
கார்மணற்கோ நெருப்புக்கோ நீருக்கோ தான்
செவ்வையாய் நான் வளர்த்த தேகந்தன்னில்
நிலையான உயிர் நின்று ஊசலாடி
ஒவ்வாது விட்டுடலை நீங்கும் முன்னே
ஓடிவந்து உன்னருளைத் தருவாயையா
செவ்வலரி கோங்கு வில்வஞ் சூழும் மண்டூர்த்
தில்லையிலே வந்துதித்த தங்கவேலே

ப.வீரசிங்கம் ஆசிரியர்
மண்டூர்

# திருக்கோவில் சித்திர வேலாயுதன் காவடிப்பாடல்கள்

திருக்கோவில் வேலனைப் பாடவநதோம்
தித்திக்கும் செந்தமிழைத் தாரும் ஐயா
தெருவெல்லாம் காவடிகள் ஆடிவந்தோம்
தேவர் துயர் தீர்த்தவனே வாரும் ஐயா
சங்கமான் கண்டியனின் கால் பணிந்தோம்
சங்கடங்கள் நேராமல் காரும் ஐயா
தங்கமயில் மீதமர்ந்த உமையாள் மைந்தா - சுவாமி
சித்திர வேலாயுதனே அருள் செய்வாயே

சிவனிடமே வரம் பெற்ற அசுரர் அன்று
செருக்குற்றுத் தேவரையே அடிமையாக்க
சினங் கொண்ட சிவனும் ஒரு முடிவு காண
சங்கார வேலனாக உனைப் படைத்தான்
சிங்கமுகன் தாரகா சூரன் என்ற
பத்மா சூரன் தம்பிகளைச் சங்கரித்தே
சூரனின் உடல் கிழித்து மறுவாழ்வும் தந்தாய் - சுவாமி
சித்திர வேலாயுதனே அருள் செய்வாயே

வாகூரமலை பிழந்து வந்த கூர்வேல்
வங்காளக் கடலினிலே தீர்த்தம் ஆடி
வெண்ணாவல்பதியாம் திருக்கோவில் நாடி
வந்துறைந்த பதிதேடி நாங்கள் வந்தோம்
எங்கள் துயர் தீர்த்திடவே எழுந்துவாராய்
தங்கவேல் ஆயுதனே விரைந்து வாராய்
தமிழர்களின் தன்மானம் காக்க நீவா - சுவாமி
சித்திர வேலாயுதனே அருள் செய்வாயே

இராவணனின் காலத்துப் பழைய கோவில்
ஈராறாம் நூற்றாண்டில் வளர்ந்த கோவில்
நாகர்முனை வெண்ணாவல் பதிஎன்றோதும்
மாகோனின் ஆட்சியிலே மிளிர்ந்தகோவில்
ஈழத்தின் வரலாறு படைத்த கோவில்
சோழநாட்டுச் சிற்பிகளால் உயர்ந்த கோவில்
சேவற்கொடிதாங்கியோன் உவந்த கோவில் - உறையும்
சித்திர வேலாயுதனே அருள் செய்வாயே

அருணகிரி திருப்புகழில் அமர்ந்த வேலா
குருபரனின் கலி வெண்பா நுழைந்தவேலா
ஔவையின் தமிழ்கேட்டு மகிழ்ந்தவேலா
அனைவரையும் காப்பாற்றும் சக்திவேலா
துன்பமே அணுகாது காக்க வாரும்
தூயவனே மாயவனின் மருகாவாவா
தமிழர் துயர் துடைத்தெறிய வாரும் ஐயா - சுவாமி
சித்திர வேலாயுதனே அருள் செய்வாயே

சங்கரனின் நெற்றிக்கண் நெருப்பால் வந்தாய்
சரவணப் பொய்கையில் நீ வளர்ந்துவந்தாய்
சக்தி உடை கைவேலைத் தாங்கி நின்றாய்
சண்டாளன் சூரபத்மனை வதைத்தாய்
உலகெங்கும் அலைகின்றோம் அமைதிதாராய்
உன்னை நம்பி வாழும் எங்கள் துயரம் தீராய்
உரிமையுடன் எமைக் காக்க ஓடிவாராய் - சுவாமி
சித்திர வேலாயுதனே அருள் செய்வாயே

சக்தி வடிவேலனே சண்முகனே
சங்கரனார் புத்திரனே கார்த்திகேயா
பச்சைமயில் ஏறி வந்து காக்க வேண்டும்
பன்னிருகை கொண்டு எம்மைத் தூக்கவேண்டும்
அச்சமின்றிப் பணிவிடைகள் செய்யவேண்டும்
ஐயன் உன் திருத்தலங்கள் சுற்றவேண்டும்
சன்னிதியின் வேலவனும் நீதான் ஐயா - சுவாமி
சித்திர வேலாயுதனே அருள் செய்வாயே

ஆடி அமாவாசை தேடி நாங்கள் வந்தோம்
ஆறுமுகன் உற்சவத்தை காவந்தோம்
தேரோடும் திருக்கோவிற் கந்தவேளை
தரிசிக்கக் காவடியும் ஆடிவந்தோம்
கற்பூரச் சட்டியுடன் தாய்க்குலங்கள்
கந்தனுக்கு அரோகராய் பாடுதையா
கடலிலே தீர்த்தம் ஆடக் கூடுதையா - சுவாமி
சித்திர வேலாயுதனே அருள் செய்வாயே

தீராத மனக்கவலை தீர்ப்பாய் என்று
திக்கெட்டும் இருந்து வந்த பக்தர் கூட்டம்
சேயோனின் திருக்கோலம் தேரில் கண்டு
நெஞ்சுருகி மனக்கவலை மறந்திட்டார்கள்
மாமாங்கக் கணபதியின் தம்பி நீயே
மயிலேறும் ஈழத்துச் செந்தூர் வேலா
மடிப்பிச்சை கேட்டோம் தாய் மண்ணைக்காராய் - சுவாமி
சித்திர வேலாயுதனே அருள் செய்வாயே

கந்தன் உறை திருக்கோவில் காண வாரீர்
கடலோரம் தென்னைமரச் சோலை பாரீர்
சிந்தனையை நல்வழியில் மாற்றிவைப்பான்
சித்தம் எல்லாம் நிறைந்து வழிகாட்டிச் செல்வான்
சீரான நல்வாழ்வு எம்மைச் சேரும்
கூரான வேல் வந்து எம்மைக் காக்கும்
சோழவழ்சக் குளக்கோட்டன் செப்பம் இட்ட - கோவில்
சித்திர வேலாயுதனே அருள் செய்வாயே

மண்டூர் முருகனையும் இங்கு கண்டோம்
மாவிட்ட புரக்கந்தன் கோலம் கண்டோம்
சித்தாண்டி வேலவனின் சிறப்பு கண்டோம்
தாந்தாமலை முருகனின் தோற்றம் கண்டோம்
உகந்தை வடிவேலனின் உருவங் கண்டோம்
கதிர்காமக் கந்தனின் அழகும் கண்டோம்
அனைத்து ஊர் முருகனையும் இங்கு காண்போம் - சுவாமி
சித்திர வேலாயுதனே அருள் செய்வாயே

எங்கள் குலம் காத்துனிற்கும் தமிழ்க்குமரா
எல்லை இல்லாக் கருணை உள்ள தங்கவேலா
தங்கு தடையின்றி இங்கு நாங்கள் வாழ
தந்திடுவாய் விடுதலையை வெற்றிவேலா
கால் நடையாய்க் கதிர்காமம் சென்று வந்தோம்
கதிரைமலை ஏறியும் கண்டு வந்தோம்
கனகமயில் மீதேறிக் காட்சி தந்தாய் - சுவாமி
சித்திர வேலாயுதனே அருள் செய்வாயே

பெருவெள்ளம் மூடாமல் தடுத்து நின்றாய்
பேரலையின் சீற்றத்தைத் தணியச் செய்தாய்
பெரும் பஞ்சம் நிகழாமல் காத்து வந்தாய்
பெருமானுன் திருவருளால் மீண்டு வந்தோம்
அழகு தமிழ்க்குமரன் என நாமம் பெற்ற
ஆனைமுகன் சோதரனே அருகில் வாராய்
அன்னை சக்தி அரவரணத்த அரனார் மைந்தா - சுவாமி
சித்திர வேலாயுதனே அருள் செய்வாயே

கடம்பனைக் கடலோசை அரவணைக்கும்
கந்தனது கருணையினால் அல்லல் தீரும்
தென்னைமரத் தென்றலும் கீதம் பாடும்
தேனினும் இனிய தமிழ்காற்றில் பாயும்
திருக்கோவில் குமரனது புகழைப்பாட
தீராத நோய் பிணிகள் விலகி ஓடும்
சீரான வாழ்வு எம்மை நாட வேண்டும் - சுவாமி
சித்திர வேலாயுதனே அருள் செய்வாயே

திருமாலின் புத்திரிகள் இரண்டு பேரும்
முருகன் மேல் ஆசை கொண்டு தவம்புரிந்தார்
தேவேந்திரன் புதல்வியாகி அமிர்தவல்லி
தேவசேனா நாமம் உடன் வாழ்ந்து வந்தாள்
தேவர்மூவர் யாவருமே சேர்ந்து வாழ்த்த
திருப்பரங்குன்றமதில் முருகவேளும்
தேவயானை கைப்பிடித்தே மகிழ்ந்தே நின்றாய் - எங்கள்
சித்திர வேலாயுதனே அருள் செய்வாயே

மான்வயிற்றுக் குழந்தையாகி சுந்தரவல்லி
நம்பிராசன் தம்பதியின் கண்ணில்பட்டள்
வள்ளிக் கொடிமத்தியில் கண்டதாலே
வள்ளியம்மை நாமம்இட்டு வளர்த்துவந்தர்
வள்ளி அலள் தினைப்புனத்தைக் காவல் செய்ய
வேடுவனாய் கிழவனாக வேடம் இட்டு
வேல்முருகா வள்ளியை நீ வதுவை செய்தாய் - சுவாமி
சித்திர வேலாயுதனே அருள் செய்வாயே

நினைக்காமலே கொடுக்கும் கற்பகம் நீ
கேளாமலே கொடுக்கும் காமதேனு
விரும்பாமலே கொடுக்கும் சிந்தாமணி
திருக்கோவில் வாழும் உமைக் காணவந்தோம்
அழைக்காமலே வருவாய் கந்தவேளா
ஆபத்தில் உதவிடுவாய் கார்த்திகேயா
அடியாரை வழிநடத்தும் சுப்ரம்மண்யா - சுவாமி
சித்திர வேலாயுதனே அருள் செய்வாயே

கங்கையிலே அவதரித்த காங்கேயன் நீ
கார்த்திகைப் பெண் வளர்த்த கார்த்திகேயா
சரவணப் பொய்கையிலே சரவணன் நீ
தாரகனைக் கொன்றழித்த தாரஉறாரி
சக்தியிடம் வேல் பெற்ற சக்திவேலா
சிவனுக்கே பாடம் சொன்ன சுவாமி நாதா
சிவபூசை ஆனந்தம் காண வந்தோம் - சுவாமி
சித்திர வேலாயுதனே அருள் செய்வாயே

ஈழத்துச் திருச்செந்தூர் வேல் முருகா
வேழமுகன் சோதரனே மால் மருகா
தெய்வயானைக் கரம்பிடித்த சுப்ரம்மண்யா
சிங்கார வேலவனே நல்லூர்க் கந்தா
மங்காத வெண்ணாவல் பதியில் வாழும்
மாயூர வாகனனே உமையாள் மைந்தா
மறவாமல் கேட்ட வரம் அருள்வாய் ஐயா - சுவாமி
சித்திர வேலாயுதனே அருள் செய்வாயே

கந்தா உன் தந்தை சிவன் கோவில் செல்வோம்
தான் தோன்றி ஈஸ்வரனை பணிந்து நிற்போம்
மாமாங்க ஈஸ்வரனின் மகிமைபாடி
முனீஸ்வரன் தலம் சென்று பூசை காண்போம்
கோணேசர் கேதீசர் தலங்கள் சென்று
கண்விழித்துச் சிவராத்திரி நோன்பும் நோற்று
கடுகளவும் பயம் இன்றித் திரும்பவேண்டும் - சுவாமி
சித்திர வேலாயுதனே அருள் செய்வாயே

முருகாற்றுப்படை நூலின் பெருந்தலைவா
அருணகிரியார் பாடும் தமிழ்க்குமரா
ஆறுபடை வீடமர்ந்த கார்த்திகேயா
ஐங்கரனின் தம்பியே சம்பு மைந்தா
இருளோடி விலகவே ஒளியாய் நீவா
திருக்கோவில் முருகனே ஓடிவாவா
தெய்வானை வள்ளி மகிழ்தங்கவேலா - சுவாமி
சித்திர வேலாயுதனே அருள் செய்வாயே

சொந்த மண்ணில் நிரந்தரமாய் வசிக்கவேண்டும்
சொந்தபந்தம் கலையாது காக்க வேண்டும்
எல்லோரும் ஒற்றுமையாய் வாழவேண்டும்
வல் அசுரர் மாய்த்த உன் துணையே வேண்டும்
தொல்லை இன்றித் தொழில் செய்து உயரவேண்டும்
நல்லகுருநாதன் உனைப் பாடவேண்டும்
செல்வனே திருக்கோவில் உறையும் கந்தா - சுவாமி
சித்திர வேலாயுதனே அருள் செய்வாயே

ஆடி அமாவாசை தீர்த்தம் காணவந்தோம்
அழகனே உன் புகழைப்பாட வந்தோம்
தேடியே உன் பாதம் பணிய வந்தோம்
அரோகரா ஓசையிலே மெய் சிலிர்த்தோம்
அலைகடலாய் மக்கள் வெள்ளம் கடந்து வந்தாய்
ஆழியிலே தீர்த்தமாடும் காட்சி தந்தாய்
பிறந்தபயன் இன்று நிறைவேறுதய்யா - சுவாமி
சித்திர வேலாயுதனே அருள் செய்வாயே

வேல் திரும்பி வரலாறு படைத்த கோவில்
கல்வெட்டில் பட்டயங்கள் பதித்த கோவில்
தேசத்துக் கோவில் என் விரிந்த கோவில்
பூபால கேந்திரர் பணி ஆற்றும் கோவில்
மன்னர்களால் புதுப்பொழிவு பெற்ற கோவில்
திருக்கோவில் வேல் முருகன் வாழுங்கோவில்
தேடியே நாம் இங்கு கூடினோமே- சுவாமி
சித்திர வேலாயுதனே அருள் செய்வாயே

மூர்த்தி - தலம் - தீர்த்தம் என்ற மூன்றும் உண்டு
தேர் ஓட நாற்புறமும் வீதி உண்டு
அமாவாசை அமுது ஆக்கத் தோப்பும் உண்டு
அன்னதானம் வழங்க வன்னி நிழலும் உண்டு
அத்தனையும் அமைந்த திருக்கோவில் வாழும்
வித்தகனே வினை தீர்க்க எழுந்து வாராய்
கத்தும் கடல் ஓரம் வாழும் சுப்ரம்மண்யா - சுவாமி
சித்திர வேலாயுதனே அருள் செய்வாயே

கலியுகவரதனைக் காண வந்தோம்
கண்கண்ட தெய்வத்தைப் போற்ற வந்தோம்
சலியாது உன்நாமம் பாட வந்தோம்
சம்புக்குமாரனுனை வாழ்த்த வந்தோம்
சஷ்டி விரதமும் நோற்று வந்தோம்
சக்தி வடிவேலன் உனைத் தேடி வந்தோம்
சூரனை இரு கூறாய் பிளந்தவேலா - சுவாமி
சித்திர வேலாயுதனே அருள் செய்வாயே

ஏறுமயில் ஏறி விளையாடுமுகம் ஒன்று
ஈசருடன் ஞானமொழி பேசும் முகம் ஒன்று
கூறுமடியார்கள் வினை தீரத்தமுகம் ஒன்று
குன்றுருவ வேல்வாங்கி நின்றமுகம் ஒன்று
மாறுபடு சூரரை வதைத்த முகம் ஒன்று
வள்ளியை மணம் புணரவந்த முகம் ஒன்று
ஆறுமுகம் ஆனபொருள் நீஅருளல் வேண்டும்
ஆதி அருணாசலம் அமர்ந்த பெருமாளே.

திரு.இரா.தெய்வராஜன்
திருக்கோவில்

# முருகன் கும்மி

தம்பிலுவில் பதி வீற்றிருக்கும் வர
சித்தி விநாயகர் தாள் பணிந்து
கும்மிப் பாடல்களைப் பாடவந்தோம் - நீ
எம்மோடிருந்து உதவிடய்யா

கந்தப் பாணந்துறை என்றழைக்கப்படும் வெள்ளை
நாவற்பதியினில் வந்தமர்ந்த
சித்திர வேலனைப் பாடவந்தோம் - அம்மா
நாமகளே நாவில் வந்திடம்மா

வங்கக் கடற்கரை ஓரத்தில் வந்து
தங்கி இருக்குது சித்திரவேல்
எங்கள் துயரங்கள் ஏக்கங்கள் யாவையும்
உங்களிடம் சொல்ல ஓடிவந்தோம்

இராமாயணகால இராவணனும் வந்து
நீராடி உன்தாள் பணிந்து நின்றான்
போராடி வாதாடித் தீர்வேதும் காணாமல்
சோர்வான எம்குலம் காத்திடையா

வடக்காகத் தங்கிய தங்க வேலாயுதம்
கடற்கரை நோக்கித் திரும்பியதால்
திரும்பிய கோயிலாய் நாமம் பெற்றுயர்ந்த
திருக்கோவில் ஊர் வாழும் வேல்முருகா

சோழரின் வம்சத்தில் வந்துதித்த வீரர்
காலிங்க மன்னர்கள் செப்பனிட்ட
கோவிலிலே உறை கந்த வேளே – எங்கள்
குற்றம் களைந்தெம்மைக் காருமையா

தீட்டிய கல்லையே கூர்பார்க்க எண்ணி
தேவர்குலத்தையே சீரழித்த
சூரபத்மனது ஆணவம் அழித்த
சித்திர வேலாயுதன் தாள் பணிவோம்

அப்பனுக்கே உபதேசங்கள் சொல்லியே
அழகு சுவாமிமலை போய் அமர்ந்தாய்
ஆறுபடை வீடும் போதாதென்று நீ
அடியவர் நெஞ்சிலும் வாழுகின்றாய்

ஔவையின் நற்றமிழ் கேட்டிடவே அன்று
ஆடுகள் மேய்ப்பன் வேடமிட்டு
நாவல் மரத்திலே ஏறி உலுப்பியே
நாடகம் ஆடிய வேலவனே

சூரனைப் பிளந்து சேவல் மயிலாக்கி
திருப்பரம் குன்றம் திரும்பியதம்
தெய்வானை அம்மனைக் கைபிடித்து நீயும்
தேவ சேனாதிபதி ஆகினீரே

மான் மகள் வள்ளியைக் கைப்பிடிக்க அன்று
மாறு வேடங்களில் நீ அலைந்தாய்
தேனும் தினை மாவும் வாங்கியே உண்டு நீ
தணிகை மலையில் மணம் முடித்தாய்

அமிர்தவல்லியான தேவயானையையும்
சுந்தரவல்லியாம் வள்ளியையும்
வேல்முருகன் மணம் செய்ததனால் அவன்
மால் மருகன் என்ற நாமம் பெற்றான்

கான மயிலாட நீலக்குயில் கூவ
கண்டுகளிக்கும் உகந்தை வேலா
ஈனப்பிறவியாய் ஊனமுற்று வாழும்
ஈழத் தமிழரைக் காத்திடையா

வாவிபுடை சூழும் மண்டூர் பதியிலே
வாழ்ந்து வரும் எங்கள் வேலவனே
வாழ்விழந்து வாழும் ஏழைத் தமிழரை
வாழ்விக்க நல்வழி காட்டுமையா

ஆண்டிச் சித்தனுன்னை பூசித்திட அன்று
ஆலயம் சின்னதாய்க் கட்டி வைத்தான்
அண்டம் புகழ்ந்திடும் சித்தாண்டி வேலனே
வேண்டும் வரம் தர வாருமையா

தாந்தா மலையிலே தங்கி அருள் செய்யும்
சுந்தர வேலனே காத்திடுவாய்
சூரபத்மன் உடல் கூறு செய்த வேலால்
ஓரவஞ்சனைகள் மாய்த்திடுவாய்

வெருகல் பதியிலே வீற்றிருக்கும் எங்கள்
வேழமுகத்தவன் சோதரனே
வேங்கை மரமாக நின்றவனே எங்கள்
வேதனை தீர்த்திட வாருமையா

மாணிக்க கங்கை வளங்கொழிக்க மிக்க
மாட்சிமை பெற்ற திருத்தலமாம்
சாதி மொழி பாகு பாடு இன்றி மக்கள்
சங்கமம் ஆகும் கதிர்காமம்

சூரனைச் சங்காரம் செய்த இடம் வள்ளி
நாயகியை மணம் செய்த இடம்
ஏமகூட மென்று கந்தப் புராணமும்
கூறும் தலமே கதிர்காமம்

கல்லடியின் கடல் ஓரத்திலே வாழும்
வல்லகுருநாதா வேல்முருகா
நல்லூர்ப் பதியிலும் நீ அமர்ந்தாய் எங்கள்
தொல்லை தொலைத்திடு மால் மருகா

ஆனைப் பந்தியானின் சோதரனே அதி
அற்புதங்கள் செய்யும் வேலவனே
ஈனர்களின் செயல் இன்னும் தொடராமல்
ஈழத் தமிழரைக் காருமையா

ஆதவன் உதிக்கும் வேளையிலே
அதிகாலை சிவபூசை காணவந்தோம்
ஆனந்தமான அரோகரா ஓசையில்
அத்தனை துன்பமும் போனதையா

மங்கை மாரி அன்னை பாசம் வைக்க அண்ணன்
மாணிக்கப் பிள்ளையார் நேசம் வைக்க
தங்கவடிவேலன் இங்கிருக்க இனி
என்னகுறை என்று நாம் மகிழ்வோம்

திருப்பரங்குன்றமும் செந்தூரும் மற்றும்
திருவாவி நன்குடி சுவாமிமலை
திருத்தணிமலையும் பழமுதிர்ச் சோலையும்
திருக்கோவில் வேலனின் வீடுகளே

கந்தப் புராணம் கந்தர் அனுபூதி
கந்தர் அலங்காரம் ஆற்றுப்படை
சேவல் விருத்தம் மயில் விருத்தம் - நூல்கள்
வேலவனின் புகழ் ஓதிடுமே

வேல்முருகா திருமால் மருகா – கோவில்
போரதீவின் வடிவேல் அழகா
மாவிட்ட புரத்து மாணிக்கமே எங்கள்
மண்ணை மீட்டுத்தர வா முருகா

சகல கலை அம்மன் உன் அன்னையாம் அவள்
சண்முகன் உன்னையே பார்த்திருப்பாள்
சங்கரன் மைந்தனே சித்திர வேலனே
எங்கள் குறை தீர்க்க வாரும் ஐயா

தம்பிலுவில் ஊரின் எல்லையிலே வாழும்
தாயே காயத்திரி மைந்தனே வா
நாம் தமிழர் என்ற நாமம் நிலைத்திட
நல்ல வழிகளைக் காட்டும் ஐயா

ஐப்பசி மாதம் வளர்பிறைச் சஸ்டியில்
ஆறுதினங்களும் நோன்பிருந்தால்
மாறாத நோய்களும் மாறிவிடும் - எங்கள்
ஆறுமுகன் அருள் கூடிவரும்

மங்களமே சுபமங்களமே – எங்கள்
தங்கவேலனுக்கு மங்களமே
தந்திடுமே அருள் தந்திடுமே இந்த
கந்தன் கும்மி நலம் தந்திடுமே

இரா.தெய்வராஜா
திருக்கோவில்

## திருக்கதிர்காம முருகன் வழிநடைக் கும்மி

கானக்குறத்தி மணவாளன் - கந்த
சாமிமேல் யான்கும்மி பாடுதற்று
மோனக்கை வேழமுகவன் - கணபதி
முன்னே நடந்திட வாருமையா

வாருமையா வடிவேலவனே - கவி
தாருமையா சிவபண்டிதனே
காருமையா ஈராறு கண்களினால்
பாருமையா உமை பாலகனே

வாணி சரஸ்வதி எந்தாயே - மாதா
வந்து என் நாவில் குடியிருந்து
வேணி அணிந்தவன் மைந்தனைப் பாடிட
வேண்டும் வரம்பல தாருமம்மா

தாரகாசூரனைக் கொன்றவனே - உன்னை
நாடிநடந்திட எண்ணங்கொண்டு
பாடியே நாம் வரும் வேளையிலும் - எங்கள்
பக்கத்தில் நில்லப்பா வேலுடனே

காலைக்கடனை முடித்துக்கொண்டு - சுவாமி
காவி உடுத்து வெண்ணீறணிந்து
வாலை திரிபுர மாலை இட்டுக் - கொண்டு
வேலனைப் பாடுங்கோ சாமிகளே

வெற்றிக் குமரன் வெருகல்பதியுறை
சித்திரவேலன் நல் சித்தாண்டியான்
மன்னனாம் தேவர்க்கதிபதியான - எம்
மண்டூரான் நல்லைவாழ் செந்தூரன்

ஏழுமலை கந்தன் வாழுமலை - சுவாமி
இடும்பன் கடம்பன் இருந்தமலை
ஓமென்றொலிக்கும் உகந்தைமலைதனைக்
உற்று நோக்கிடு சாமிகளே

நோக்கிப் பணிந்தோர்க்கு துன்பமில்லை - சாமி
நோன்புடன் ஆண் பெண் அடியார்கள்
நீக்கற சேவைகள் தொண்டுபுரிதலை
நின்றுபார் சாமியின் ஆலயம்பார்

ஆலயம் அப்பனின் சோலை நடுவில்
அழகான வீதியும் வேம்புகளும்
வேலவர் கோயிலைச் சுற்றிடுவோம் - மன
வேதனை தன்னையும் கூறிடுவோம்

கூறிடுவோம் மலை ஏறிடுவோம் - சிறு
குன்றுச் சுனையில் முழுகிடுவோம்
நீறிடுவோம் வள்ளி கோயில் எதிர் சென்று
நெற்றியில் மஞ்சள் அரைத்து வைப்போம்

மஞ்சள் நீர் வள்ளியும் ஆடிடவும் - கடல்
சஞ்சலம் பொங்கியே ஓசையிட
அஞ்சலெனக் கை காட்டவே - வேலனும்
துஞ்சினதாம் அலை சாமிகளே

சாமிகளே சூடம் ஏற்றிடுவோம் - சாதப்
பொங்கலும் இட்டு வணங்கிடுவோம்
நாற்றிசை போற்றும் உகந்தை மலையானை
நம்பிக்கை கொண்டு பணிந்திடுவோம்

பணிந்திடு துன்பம் பறந்தோடும் மற்றும்
பாவம்பிணி குன்மநோய் அகலும்
துணிந்திடு சாமி உனை நம்பினேன் என்று
சொல்லிவை வெள்ளை நல் உள்ளமதில்

வெள்ளை எனும் நாவல் கண்ணைக் - கவருமே
வள்ளல் விநாயகன் வாழ்ந்திருக்கார்
உன்னையும் என்னையும் ஆட்டித் - திரிகிற
உகந்தை முருகனைக் கண்டிடலாம்

கண்டிடலாம் சாமி உண்டிடலாம் - வழி
சென்றிடலாம் சுமைதானெடுப்பீர்
பெண்டிரெல்லாம் சாமி என்று நினைத்திடு
போடுங்கோ சாமி வழிநடங்கோ

கந்தனை வேண்டி நீர் பாடுங்கோ சாமிகாள்
காத வழிகளும் தான் துலைய
சிந்தையில் வீட்டை நினையாதே - சாமி
சீக்கிரம் உன்னைத் திருப்பிடுவார்

வெட்டவெளி தனைப் பார் சாமி - எங்கள்
வேலன் ஒளிதனைக் காட்டிடுவார்
வட்டையாம் வாகூர கிட்டடியில் - வரும்
வாருங்கோ சாமிகள் போய்விடுவோம்

சூரன் உடல் அறவிட்டவேலாம் - அது
வாகூர வட்டைமலை பிளந்து
நாவாரப் பாடுங்கோ சாமிகளே - இவை
வாகூர வட்டைதான் பாருங்களே

பூத்துக்குலுங்கும் நல்நாவைகளும் - சாமி
ஏற்ற கிணறு எதிர்த் தோன்றும்
மூட்டையிறைக்கிடு சாமிகளே தண்ணீர்
முன்போகும் சாமி போய் அள்ளுங்களே

அள்ளிக் குடிக்க கொடுசாமி நாங்கள்
ஆறி அமர இடம் பாரு
தள்ளிச் சென்றால் சிறு கொள்ளியும் தண்ணீரும்
தானெடுத்தும் குளித்தே வருவோம்

வந்து இருந்து துதிபாடு முருகன்
வாலயம் நாவினில் நின்றாடும்
சொந்தம் பந்தம் நமக் கொன்றுமில்லை சாமி
தூங்கிடு வேல்தான் துணை நமக்கு

வேலே துணை என் றெழுந்திடுங்கோ சாமி
வெள்ளணையில் நடைநல்லதுதான்
ஆளுக்கு பின்னோர் ஆளாகவந்தாலே
அருகினில் காட்டுமுள் சிக்காது

வெள்ளி முள்ளுச் சோலை பாருங்கோ - சாமிகள்
வள்ளி கணவன் வழிதனிலே
தெள்ளிக் கொடுக்கத் தினைமாவும் - தேனும்
திண்டாராம் பண்டாரம் சாமிகளே

மாயவா என்று மயில் கூவும் அரி
கேசவா என்று கிளி பேசும்
வீசிடும் தென்றல் மிக விரையும் சாமி
கூசாது வேலனைக் கூப்பிடுங்கோ

குஞ்சரக் கூட்டத்தைப் பார் சாமி - காளை
கூட்டமுடன் நின்று ஓடுதுபார்
அஞ்சாது கந்தாபோ என்றிடவே - யானை
அப்பாலே போய்விடும் சாமிகளே

வந்திடுவார் காலை மூன்று குளம் - தாண்டி
வந்தெதிர் தோன்றிடும் பூமுனையும்
காமன் எரிந்தவெண் சாம்பலாய்ப் பட்சிகள்
காட்சியைப் பாருங்கோ சாமிகளே

போற்றிக் குமுக்கனில் தீர்த்தமாடிச் - சாமி
ஏற்ற திருநீறு இட்டுக்கொண்டு
பார்பதி பத்தினி தெய்வத்தின் கோயிலை
பாருங்கோ ஆடுங்கோ சாமிகளே

ஆடியே வந்து நல்வாக் கருள்வாய் - மாரி
ஆனந்த தாண்டவமே புரிவாள்
தேடியுங் காணாத காவல் தெய்வம் - சாமி
சீனி கடலை அவல் படைப்போம்

படைத்த நல் பொங்கல் சுவை தேனாம் - சாமி
பார்க்க உயர்ந்த மரநிழலாம்
நடைதனில் நோய் பிணி வாராமல் தாய்தனை
நமஸ்கரித்துப் போவோம் சாமிகளே

போம்பொழுது சுமை மாற்றிக்கொள்ளு சாமி
புண்ணியமுண்டாம் உனக்கு நன்றாம்
வீம்புகள் ஆணவம் விட்டொழித்தால் சாமி
நீங்கிடும் மாயை உன் நெஞ்சை விட்டே

விட்டிடு ஆசையை பற்றுவைத்தால் - உந்தன்
விரதமும் நேர்த்தியும் வீணாகும்
எட்டிநட சாமி வேல் முருகா என்று
என்னம்மை மாரி துணை நமக்கு

மாரிபலவேசம் கொண்டவளாம் இந்த
மானிலம் தன்னையும் ஆள்பவளாம்
பாரில் இடர்பிணி தீர்ப்பவளாம் சாமி
பாத நடைக்கும் இவள் துணையாம்

அன்னைதுணை என நம்பிடுங்கோ சாமி
ஆபத்தை காத்திடும் தெய்வமன்றோ
இன்னும் கனத்த நடைஇருக்குச் சாமி
இப்பாதை தப்பாமல் வாருங்களே

ஒற்றையடிப்பாதை மெத்தவுண்டு - சாமி
ஓடைகள் ஆறுகள் புற்றரைகள்
கல்தரை செம்மண் கலந்த தரைகளும்
காணலாம் கந்தன் வழிதனிலே

தேக்கு முதிரை சிறுகாடு - சாமி
தேடி எடுப்போம் விளாங்கனிகள்
மூட்டையின் பாரங்கள் தோன்றாது - சாமி
மூவிரு முகத்தோனை பாடுங்களே

உப்பாறுதன்னில் முதலை உண்டு - சாமி
அப்பாலே தாண்ட நல் நாவலடி
ஓடிப் பிடுங்குங்கோ உப்புருவி - சாமி
ஓர்சொதி ராவைக்கு காய்ச்சுதற்கு

காய்ச்சிடுவோம் சோறு ஆக்கிடுவோம் - சாமி
கட்டை எடுத்துத் தீ மூட்டிடுவோம்
பாய்ச்சிய சூலமும் நாவலடிச் சிவன்
பந்தலும் சாமிக் கெதிர் கிணறும்

கிணற்றினில் நற்தண்ணீர் உண்டு சாமி நாங்கள்
கிடந்து உறங்கி நாம் முன்னெழுவோம்
குணமுள்ள சாமிகாள் தேனீர் வைத்து எடு
குடித்து முடித்து வெளிக் கிடுவோம்

வெளிக்கிடும் முன்சூடம் ஏற்றிடு சாமிகாள்
வேலன் முருகனைப் பாடிக்கொள்ளு
வாவியும் துலையாத பத்தும் எதிர்வரும்
வாருங்கோ சாமிகாள் சென்றிடுவோம்

சென்றிடும் போதினில் உந்துதல் பாடிக் கொள்
தீர நடையும் கால் வேகம் கொள்ளும்
வந்திடும் பாதை மணலும் மலை மேடும்
வாருங்கோசாமி நிழல் இருப்போம்

இருந்துகுடித்து இளைப்பாறு சாமி
என்னப்பன் சோதனை பண்ணிடுவார்
தாகமும் சோர்வும் உனைவாட்டும் சாமி
சண்முக நாதனைக் கூப்பிடுங்கோ

கூப்பிட்டுத் தண்ணீர் கொடு சாமி இந்த
கோலக் குமரன் மனங் குளிர
சாப்பிட ஏதும் கொடுத்தாலும் உந்தன்
சந்ததி வாழும் நெடுங்காலம்

காலம் கலி காலத் தெய்வமப்பா சாமி
கந்தவேள் காலைப் பிடித்துக் கொண்டால்
மாலையும் திங்கள் மறையும் முதல் சாமி
வாருங்கோ கள்ள வியாழன் செல்வோம்

கள்ளவியாழனில் கால் கழுவி - சாமி
கிண்ணை விளாங்கனி தானுடைத்து
வள்ளல் வடிவேலைப் போற்றியே இவ்விடம்
உள்ளமுது கொள்வோம் சாமிகளே

உள்ளமுது கொண்டு மெள்ள எழு சாமி
ஓர்மூச்சி நல்ல நடை நடந்தால்
பள்ளமும் முள்ளி வழியும் தடுமாறும் ஒரு
பக்குவமாய் வாங்க சாமிகளே

பக்கம் திரும்பிட ஏலாது சாமி
பாரச்சுமையின் வலு வேகம்
திக்கெங்கும் போற்றும் அருள் குமரன் இங்கு
சீவிக்கிறார் நம்மைச் சோதிக்கிறார்

தோள்கள் கடுத்துவலி ஏறும் சுமை
தூக்கி எறிய நினையாதே
வாதைப்படுத்தும் எந் நோய்களும் உந்தனை
வந்தணுகாது பார் சாமிகளே

வந்தணுகாது பார் சாமிகளே - உகந்தை
வாலகுமரன் வழித்துணையாம்
பந்தமும்பாசமும் அவனிடத்தில் வைத்தால்
பாத நடைதனில் சோர்வுமில்லை

கங்கை வியாழையில் நின்றுதங்கி சாமி
காயாம்பூமேனி மருகனிடம்
பக்தியோடுபல பாக்களைப் பாடியே
முக்தி கிடைக்க முழுகிடுவோம்

யோகத்திற்கேற்ற மணலுமுண்டு சாமி
நித்திரைக்கேற்ற நிழலுமுண்டு
சம்போகம் விட்டொழிசாமிகளே நம்மை
கண்பார்க்க வேண்டும் கதிர்காமன்

கண்பார்த்தருள்புரி தெய்வமப்பா - சாமி
இந்தாபாரிங்காலே போகாதே
முந்திப்பலபேர் வழிமாறினாரென
முப்பாட்டன் சொன்னதைக் கேட்டிருக்கேன்

ஆடுங்களே தினம் பாடுங்களே - சாமி
அரோகரா போட்டுக்கை கொட்டுங்களே
கூடுங்களே வள்ளி லோலனையே தினம்
நெஞ்சில் நினைத்திடு சாமிகளே

மந்திகள் பாய்ந்து மரம் தாவும் சிறு
கந்தில் இருந்து கனி அருந்தும்
குந்தி இருந்து நட சாமி வேலன்
கோலும் தந்து உன்னைக் கூப்பிடுவார்

கூப்பிடு சாமிகுரல் கேட்டுக் கந்தன்
கோதை என் தாய்மாரை விட்டு வர
ஆரிடம் அப்பன் இருந்தாலும் - சாமி
ஆதரவு தர வந்திடுவார்

தந்திடுவார் சுகம் என்று நம்பு - வள்ளி
விந்தை நல் ஆற்றுக்குச் சென்றிடுமுன்
இந்த மர நிழல் ஆற்றோரம் சாமி
எங்குமில்லை அப்பன் தன்வழியில்

வழிதனில் மான் மரை நின்றோடும்- ஆற்றில்
மாடுகள் யானைகள் நீரருந்தும்
வெயிலும் தெரியாத நற்காடு சாமி
வேணுமென்றால் நின்று பாருங்களே

நின்றிடும் சோலை முடிவடையும் - வள்ளி
சுந்தரி ஆற்றில் நாம் தங்கிடுவோம்
நொந்த உடல் கால்கள் இந்த நல் மண்ணிலே
நோக்கிப் படுத்தால் வலி தீரும்

தீர்ந்திடும் வள்ளியின் பேராற்றுத் - தண்ணீர்
சிவ சிவா என்று முழுகிடுவீர்
காய்ந்திட வேட்டி கசக்கிப்பிழி சாமி
சாய்ந்த மரக்கிளை தான் போடு

போடுங்கள் கைத்தாளம் ஓசையிட சாமி
ஆடுங்கள் அப்பனும் தானாட
பாடுங்கள் கந்தனும் மாறுவேட முடன்
பக்கத்தில் கேட்டு இருப்பாராம்

வந்தாலும் காணமுடியாது - நம்மை
எந்த விதத்திலும் சேர்த்திடுவார்
கந்தா கடம்பா கதிர்காமா என
நொந்து முருகனைப் பாடிடுவோம்

தஞ்சமென வள்ளி ஆற்றை நாம் தாண்டுவோம்
பஞ்சமா பாதகம் தான் தொலைய
மிஞ்சிவருகிற வேங்கையும் வேல் கண்டால்
அஞ்சிப் பதுங்கிப் பணிந்திடுமே

பண்டு செய்த தோசம் இன்று துலைந்திடும்
கண்ட இடமாம் கதிரமலை
கும்பிட்டு கற்பூரம் தேங்காயுடையுங்கோ
கோலமுருகனின் தாள்பணிந்தே

தாள்பணிவோம் ஒளிசாமி மலையிலெ
தானுமெ அங்கே தெரியுதே பார்
வேணுமென்றால் இரு கையாலே அவலை
வேண்டி எடுத்து நீர் சாப்பிடுங்கோ

வேண்டுமுன் சாமி மேல் பாடிக் கொள்ளு இன்னும்
தாண்ட எதிர்வரும் கட்டகாமம்
காண்டாவனமும் முடிவாகும் வழி
நீண்டு கிடப்பதைப் பாருங்களே

பாருங்கள் பாதையும் றோட்டாகும் சாமி
வாருங்கள் கேம்பு தடை தாண்டி
காரும் கந்தா மலை கண்ட இடம் விட்டோம்
சேருவோம் கிட்டடி கட்டகாமம்

முன்னாளில் இங்கே ஓர்கிழவி சாமி
முருகன் மீது அன்பு கொண்டவளாம்
என்னாளும் மலை ஏற ஏற என்று
இருந்து நினைத்து வருத்தங் கொண்டாள்

கொண்டாளே இதைக் கண்டமுருகனும்
கோலக் கிழவிக்கு காட்சி தந்து
அண்டர்கள் போற்றும் அமரர் பதிதன்னில்
ஆச்சியும் சென்றனள் சாமிகளே

சாமிகளே குளத் தாமரையும் அன்னை
தானும் இருந்த இடமிதுவே
சோவெனக் காற்று சுழன்றடிக்கும் சாமி
வாவேலா என்று மலை காண்போம்

காணும் குளக் கரை தாமரையும் வள்ளல்
காய்களும் ஆய்ந்து சமைத்திடுவோம்
வாருங்கள் நல்ல இலுப்பை மரநிழல்
ஆறுதல்கொண்டு அமர்ந்திருப்போம்

அமருமுன்சென்று நாம் நீராடுவோம் சாமி
ஆழத்தில் நல்ல முதலையுண்டு
விபரமறியா திறங்காதே தள்ளி
மேலேபோய் நீயும் குளியாதே

குளித்து குளத்தை நாம் தாண்டிவிடில் எதிர்
கோயிலும் வீர நற்சோலையடி
வழிதனில் பிள்ளையார் கோயிலுண்டு சாமி
வாருங்கோ நின்று நாம் போய்விடுவோம்

போகுவோம் காலையில் நின்று தங்கி சாமி
பூரணமாக ஓர் சமையல் செய்து
நாரணன் மருகனை நாளை தரிசிக்க
நாடுவோம் எல்லோரும் சாமிகளே

சந்தனச்சோலையும் பஞ்சாட்சரமலை
தானெதிர் தோன்றிடும் சுவாமிமலை
வந்துமுன் காணும் கதிர்காமப் பதி
வாருங்கோ சாமிகள் சென்றிடலாம்

மாமுனி தேவர்கள் இந்திரர்கள் ஆடும்
மாணிக்ககங்கையில் தீர்த்தமாடி
காணிக்கை இட்டு கற்பூரம் ஏற்றியே
கந்தனை வேண்டுவோம் சாமிகளே

வேலனைச் சுற்றி வலம் வருவோம் தெய்வ
யானையின் கோயிலுக் கேகிடுவோம்
ஆலோலம் பாடிய அன்னையாம் வள்ளியின்
ஆலயம் பாருங்கோ சாமிகளே

வாருங்கோ சாமிகாள் வள்ளியின் கோயிலுக்
கேகிடலாம் விளக்கேற்றிடலாம்
பாருங்கோ மாவுதேன் பசுவின் நெய் ஊற்றியே
மாவிளக்கில் ஒளி ஏற்றிடுவோம்

வேடர்விலாறு இழுத்ததுவும் கந்தன்
வேங்கை மரமாகி நின்றதுவும்
கோலக்கிழவனும் கால் சறுக்கி விழ
கொண்டாடிப் பாடினாள் வள்ளியம்மை

ஐங்கரன் வள்ளியை வேலர்க்கு சேர்த்தான்
அமுது அவல் தினை மாவிடுங்கோ
பார்த்திடுங்கோ வள்ளிப் பாவை தினைப்புனம்
சேர்ந்திடுங்கோ சாமி செல்லம்விட்டு

கதிரமலைக்கு நாம் ஏறுவோம் சாமிகாள்
தட்டுத்தட்டாய் படி கட்டிருக்கார்
பெட்டி உடையுங்கோ கற்பூரக்கட்டியை
கல்லில் மேல் ஏற்றுங்கோ சாமிகளே

ஏற்றுங்கள் ஏறுங்கள் போற்றுங்கள் வேலனை
என்னப்பன் மாமலை உச்சியைப்பார்
பாருங்கள் சோதி விளக்கையும் காணுங்கள்
பார்பதி புத்திரன் மாமலையில்

மாமலைவிட்டு வரும்போது சாமி
பாமாலை ஏதும் நீர் பாடிடுவீர்
காமாளை வெப்பு வெண்சோகையும் காய்ச்சலும்
கந்தன் மலை ஏறத் தீர்ந்திடுமே

தீர்ந்திடுமே அப்பன் தீர்த்த மாடச்சாமி
வேர்ந்திடுமே திருநீறு கண்டாய்
கூர்ந்து கவனி எதிர்வரும் சாமியை
கும்பிட்டுக் கொள்ளுங்கள் சாமிகளே

கும்பிட்டு நேர்த்திகள் வைத்துக் கொள்ளு சாமி
எம்பிட்டுத் தூரமென்றெண்ணாதே
அன்பு கொண்டு நடை கும்மியைப் பாடினால்
ஆனந்தம் ஆனந்தம் சாமிகளே

ஆனந்தம் கொண்டெழுப் பாடிடுவீர் சாமி
அப்பன் எதிர்வந்து ஆடிடுவார்
கானந்தான் உன்செவி கேட்கலையோ - சாமி
தாளந்தான் உன்கைகள் போடலையோ

போடலையோ கண்கள் தேடலையோ - சாமி
பொங்கி எழமனம் நாடலையோ
கூடலையோ நல்ல கூட்டத்தில் சாமிகள்
பாடலையோ பக்திப்பாடல்களை

பாடலைப்பாடும் பெரியோரே - சிறு
பாலகன் பாடிய கும்மிகளில்
கூடல் குறைகள் இருந்தாலும் நீங்கள்
கொண்டு மனம் பொறு சாமிகளே

சாமிகள் வாழி தலம் வாழி முருகன்
சன்நிதி வாழி மலை வாழி
கூவிடும் சேவல் கொடி வாழி தீர்த்த
வாவிகள் கங்கைகள் வாழியவே

வாழிய மட்டுநகர் வாழி - தமிழ்
வையகம் வாழி எம் தாய் வாழி
வாழிய நல்கவி தந்தவிநாயக
சாமியாம் மூர்த்தியும் வாழியவே

கங்கை அணிந்த சிவன் போற்றி - எங்கள்
மங்கை பராசக்தி தாள் போற்றி
எங்கும் சிவமயம் உண்டாக நீறு
தங்கித் தரித்தவர் தாள் போற்றி'

- சுபம் -

திருக்கதிர்காம முருகன் வழிநடைக்கும்மி முற்றிற்று

புலவர் நாகமணி விநாயகமூர்த்தி
சேனைக்குடியிருப்பு

## குறிப்புகள்


## கதிர்காம பாத யாத்திரை விருத்தங்கள்

1. கழுகு மலைப்பத்து (அறுபது சில்லறைக் கோவை பக்கம் 179)
2. கதிர்காமபாத யாத்திரை விருத்தம் (திரு. இரா. தெய்வராஜன், திருக்கோவில்)
3. உகந்தை முருகன் பாமாலை (திரு. இ. வினாயகமூர்த்தி, காரைதீவு)
4. மண்டூர் முருகன் மாலை (திரு. ப. விரசிங்கம், மண்டூர்)
5. திருக்கோவில் காவடி விருத்தம் (திரு.இரா.தெய்வராஜன், திருக்கோவில்)
6. சித்தாண்டித் தோத்திரப் பாடல் (அறுபது சில்லறைக் கோவை பக்கம் 184)
7. திருக்கோவில் திருப்பதிகம் (திரு.இ.பொ.த.வில்லியம்பிள்ளை, தம்பிலுவில்)

இசையும் ஒலிப்பதிவும் :-திரு. ம. ராஜ்குமார், திருக்கோவில்

பாடியவர் :-திரு.இரா.தெய்வராஜன், திருக்கோவில்

தயாரிப்பு :- திரு.நோ.அ.லோஜன் (RN CD HOME) தம்பிலுவில்



# கதிர்காமப் பாத யாத்திரை விருத்தங்கள்

1. கழுகு மலைப்பந்து (அறுபது சில்லறைக் கோவை பக்கம் 179)
2. கதிர்காமபாத யாத்திரை விருத்தம் (திரு. இரா. தெய்வராஜன், திருக்கோவில்)
3. உகந்தை முருகன் பாமாலை (திரு. இ. விநாயகமூர்த்தி, காரைதீவு)
4. மண்டூர் முருகன் மாலை (திரு. ப. வீரசிங்கம், மண்டூர்)
5. திருக்கோவில் காவடி விருத்தம் (திரு. இரா. தெய்வராஜன், திருக்கோவில்)
6. சித்தாண்டித் தோத்திரப் பாடல் (அறுபது சில்லறைக் கோவை பக்கம் 184)
7. திருக்கோவில் திருப்பதிகம் (திரு. சி.பொ.த. வில்லியம்பிள்ளை, தம்பிலுவில்)
8. வழிநடைக்கும்மி - புலவர் நாகமணி விநாயகமூர்த்தி (சேனைக்குடியிருப்பு)
9. முருகன் கும்மி - இரா.தெய்வராஜன் (திருக்கோவில்)

இசையும், ஒலிப்பதிவும்: திரு. ம. ராஜ்குமார், திருக்கோவில்
பாடியவர்கள்: திரு. இரா. தெய்வராஜன், ஹேமா, புஸ்பலதா, திருக்கோவில்
தயாரிப்பு: திரு. நா.அ. லோஜன் (RN CD Home) தம்பிலுவில்



